# வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை

# ஆண்டறிக்கை - 2022

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**இலக்கம் . 01,**
**டீ ஆர் விஜேயவர்தன மாவத்தை**
**கொழும்பு -10.**

## தொலைநோக்கு

**“அனைவருக்கும் பாதுகாப்பான வீதி ஒழுங்குமுறை“.**

## செயற்பணி

**“நிலைப்பாட்டு அபிவிருத்தியின் பொருட்டு வீதி விபத்துக்களற்ற சமூகத்தை உருவாக்குதல்“**

## வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் அலுவலகம்

இலக்கம் **01** டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தை கொழும்பு 10, என்ற முகவரியில் அமைந்துள்ள போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்குரிய வளாகத்தில் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை நிறுவப்பட்டுள்ளது.

அலுவலக முகவரி -

வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை
இலக்கம் . 01,
டீ ஆர் விஜேவர்தன மாவத்தை
கொழும்பு -10.

| | | |
|---|---|---|
| தொலைபேசி அலுவலகம் | - | 0112696890 / 01126887109 / 0112674162 |
| தொலைநகல் | - | 0112680163 |
| மின்னஞ்சல் | - | ncrstransport@gmail.com |

# பொருளடக்கம்

## வருடாந்த அறிக்கை - 2022
## (2022.01.01 முதல் 2022.12.31)


| ***விபரம்*** | ***பக்க இலக்கம்*** |
|---|---|
| அறிமுகம் | 04 |
| வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் அங்கத்துவ இணைப்பாக்கம் | 05 |
| வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் பதவியணி | 06 |
| வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் நோக்கம் | 07 |
| வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் | 08 |
| வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் செயல்பாடுகள் | 09 – 23 |
| வீதி விபத்து தரவுகள் | 24- 25 |
| வீதிப் பாதுகாப்பு நிதியத்திற்கு பங்களிப்பு வழங்குகின்ற பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் | 26 |
| இறுதி கணக்குகள் | |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் | |

## வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை

### அறிமுகம்

1998 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்கம் கொண்ட மோட்டார் வாகன சட்டத்தின் 213 (அ) மற்றும் 213(ஆ) என்ற பிரிவுகளின் கீழ் வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனமாக நிறுவப்பட்டுள்ளது. அதற்கமைய வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை போக்குவரத்து விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற தவிசாளர் உள்ளிட்ட 16 அரச நிறுவனங்கள் மற்றும் ஒரு அரச சார்பற்ற தாபனமொன்றில் பிரதிநிதியொருவர் உள்ளிட்ட 17 பிரதிநிதிகளைக் கொண்ட நிறுவனமாகும். வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையினை பிரதிநிதிப்படுத்துகின்ற இவ் அனைத்து நிறுவனங்களும் இந்நாட்டின் போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு விடயம் தொடர்பாக பொறுப்புகூற வேண்டிய அரச நிறுவனங்களாகும். வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் செயற்பாடுகள் குறித்து தேவைப்படுகின்ற வருமானங்கள் இலங்கைக்குள் காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்ற காப்புறுதி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுவதுடன், 2004 நொவெம்பர் மாதம் 24 ஆந் திகதி 1368/18 ஆம் இலக்கம் கொண்ட அரச அதி விசேட வர்த்தமானியின் மூலம் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் நிதியம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ளவாறு, “மூன்றாந் தரப்பின் எதிர்பாரா ஊறுபாடு குறித்து சந்தர்ப்பத்துக்கேற்றவாறு காப்பீட்டு உறுதி அல்லது பிணையொன்று காப்புறுதி செய்யும் அனைத்து காப்புறுதி நிறுவனங்களாலும் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைக்கு தவணைத் தொகையிலிருந்து நூற்றுக்கு ஒன்று (1%) பங்களிப்புத் தொகையாக செலுத்துதல் வேண்டும்”. அதற்கமைய இலங்கை காப்புறுதிச் சபையின் கீழ் பதிவு செய்துள்ள அனைத்து காப்புறுதிக் கம்பனிகளும் அக்குறித்த நிறுவனங்களின் மூலம் காப்புறுதி செய்கின்ற மூன்றாந் தரப்பு அனைத்து வாகனங்களுக்காக அறவிடப்படுகின்ற காப்புறுதி கட்டணத்திலிருந்து 1% பெறுமதியான தொகை 2004 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை நிதியத்திற்கு வரவு வைத்தல் வேண்டியதுடன், 2021 செப்தெம்பர் 17 ஆம் திகதி போக்குவரத்து அமைச்சரினால் வெளியிடப்பட்ட இலக்கம் போக்குவரத்து அமைச்சரினால் வெளியிடப்பட்ட இலக்கம் 2245/31 கொண்ட அரசங்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அக்குறித்த காப்பீட்டு பங்களிப்புத்தொகை 2021 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் 2% வரை அதிகரித்துக்கொள்வவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப்பொறுப்புகள் தொடர்பாக 2005 ஏப்ரல் 04 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1387/04 ஆம் இலக்கம் கொண்ட அரச அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. வீதியில் விபத்துகளை ஏற்படுத்தி நிறுத்தாமல் தப்பியோடிய வாகனங்களை அடையாளங் காண முடியாத நிலையிலுள்ள வாகனங்களை உறுதிபடுத்தியதன் பின்னர் அக்குறித்த வாகனங்களால் விபத்துகளுக்கு பலியாகி உயிரிழந்த மற்றும் ஊனமுற்ற நிலைக்கு தள்ளப்பட்ட நபர்கள் தொடர்பில் சபை மூலம் அங்கீகாரம் வழங்கியிருப்பின் அதற்கேற்றவாறு நட்டஈடு தொகை அளிக்கப்படுவதே பொறுப்புகூறவேண்டிய பிரதான கடமைப் பொறுப்புகளில் ஒன்றாக அமைகிறது.

வீதி பாதுகாப்பை உறுதி செய்தல், விபத்துக்களைக் குறைத்தல், பாதசாரிகள் மற்றும் பயணிகளின் உயிர்களுக்கு விபத்துக்கள் ஏற்படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளல், பொது மக்கள் விழிப்புணர்வு குறித்து அதற்காகத் தேவைப்படுகின்ற புதிய சட்டங்களை இயற்றுவது அல்லது ஏற்கனவேயுள்ள சட்டங்களைத் திருத்தம் செய்வதற்காக விடய பொறுப்பு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவது உள்ளிட்ட ஒட்டுமொத்தம் பாதிப்புகளை ஏற்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளையும் நீக்குவதன் மூலம் வீதி பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக இந்த நிதியில் வைப்புச் செய்யப்படுகின்ற தொகை மூலம் பயன் பெற முடியும்.

அதேபோன்று வீதி பாதுகாப்பு தொடர்பான அனைத்து நிர்வாக மற்றும் பிற செலவுகளை ஏற்பதும் இந்த நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்

## வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் அங்கத்தவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. ஆர்.எல்.அன்டன் டி. மென்ஸ் | - | தவிசாளர், வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை |
| 02. | திருமதி. ஆர்.ஏ.கே.ரேணுக்கா | - | செயலாளர், வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை |
| 03. | செல்வி.எச்.பி.ஷிரோமி ரத்நாயக்க | - | கணக்காளர்,வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை. |
| 04. | திரு. ஆர். எம்.எம். ரத்நாயக்க | - | மேலதிக செயலாளர் (பாடசாலை அலுவல்கள்) கல்வி அமைச்சு. |
| 05. | திரு. எம்.எம்.நய்முதீன | - | மேலதிக செயலாளர் (கருத்திட்ட மேற்பார்வை), மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| 06. | திரு. சுமித் சி.கே. அலஹகோன் | - | மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம். |
| 07. | திருமதி. கே.ஜீ.சுமுது தினேஷா. | - | சிரேஷ்ட உதவி செயலாளர் (நிர்வாகம்), போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு. |
| 08. | திரு.எச்.ஏ.கே.ஏ.இந்திக்க ஹபுகொட | - | சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், (பணிப்பாளர், மோட்டார் வாகன நிர்வாகம் மற்றும் வீதி பாதுகாப்பு) இலங்கை பொலிஸ் திணைக்களம் |
| 09. | திரு.எச். ஆர். பசிது. | - | சிரேஷ்ட விரிவுரையாளர், மொரட்டுவை பல்கலைக்கழகம் |
| 10. | திரு. சஷி வெல்கம | - | தவிசாளர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு |
| 11. | திரு. தம்மிக்க ஆட்டிகல | - | தவிசாளர்,இலங்கையின் ஆட்டோமொபைல் அசோசியேஷன் |
| 12. | திரு. கிஹான் ராமநாயக்க | - | தவிசாளர், இலங்கை விபத்துக்கள் தடுப்புச் சங்கம் |
| 13. | திருமதி.சி.பி.அய்.டி.சில்வா | - | சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி, இலங்கைக் காப்புறுதி ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு |
| 14. | திரு.ஜீ.ஜீ.எம். குலதிலக்க | - | பிரதான நிறைவேற்று அதிகாரி, இலங்கை போக்குவரத்துச் சபை. |
| 15. | திருமதி. கே.எஸ்.எம் சமரசேக்கர் | - | பிரதான வைத்திய அதிகாரி, தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம் |
| 16. | திரு.சி.டப்ளியு. சி. கே. தர்மசேன | - | பணிப்பாளர், முகாமைத்துவ திணைக்களம், நிதி அமைச்சு. |
| 17. | திரு.ஜீ.டப்ளியு.ஜீ.அபேகுணவர்தன | - | பணிப்பாளர் (நகர அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள்),நகர அபிவிருத்தி அதிகாரசபை. |
| 18. | திரு.டீ.எம்.கே.எஸ். திசாநாயக்க | - | பணிப்பாளர் (பொறியியல்) , நெடுஞ்சாலைகள் அமைச்சு |
| 19. | திரு. பி.ஏ. சந்திரபால | - | பணிப்பாளர் பொறியியலாளர் (மோட்டார் வாகன நிர்மாண மற்றும் வீதி பாதுகாப்பு), கொழும்பு மாநகர சபை. |
| 20. | திரு.ஆர்.ஏ.சுதத் | - | பணிப்பாளர் (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் வீதி பாதுகாப்பு முகாமைத்துவம்) வீதி அபிவிருத்தி அதிகாரசபை |

## வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் பதவியணியினர்

| | | |
|---|---|---|
| 01. திரு. ஆர்.எல்.அன்டன் டி. மென்ஸ் | - | தவிசாளர், வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை |
| 02. திருமதி. ஆர்.ஏ.கே.ரேணுக்கா | - | செயலாளர் , வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை (ப.க.) |
| 03. செல்வி.எச்.பி.ஷிரோமி ரத்நாயக்க | - | கணக்காளர், வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை. (ப.க.) |
| 04. செல்வி ஜே.டி.ஆர் ஜயசிங்க | - | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 05. திரு. ஈ.ஜீ.எஸ். ஏக்கநாயக்க | - | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 06. திருமதி. கே.ஈ.பியரங்கனீ | - | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 07. திருமதி. பி.ஏ. சித்ராணி ஜயதிஸ்ஸ | - | முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் |
| 08. செல்வி. எஸ்.ஏ.கே. ஏ. சமரசிங்ஹ | - | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 09. திரு.டப்ளியு. ஏ.ஏ. டப்ளியு. விக்ரமஆரச்சி | - | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 10. செல்வி..டீ.சி.பீ.டீ. டயஸ | - | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 11. திரு. எம்.ஏ.என்.எஸ். ஜயதிலக்க | - | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 12. திரு.ஏ.கே.யு. சந்திரகாந்த | - | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 13. திரு.கே.டீ.சி. சதுரங்க | - | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 14. திரு.ஆர்.பி.ஜி.டி.எஸ்.கே.சோமரத்ன | - | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 15. திரு. பீ.பி.ஏ.ருவன | - | எழுதுவினைஞர் |
| 16. திரு ஜி.ஏ.புத்திக்க பிரபாத் | - | தொழில்நுட்ப உதவியாளர் |
| 17. திரு.கே. மஹேஷ் சங்ஜீவ | - | தொழில்நுட்ப உதவியாளர் |
| 18. திருமதி .கே.டீ.ஹர்ஷிகா தில்ஹானி | - | அலுவலக ஊழியர் சேவை |
| 19. திருமதி.ஏ.பி.டி. ஹர்ஷனீ சதமாலி | - | புகையிரத ஊழியர் சேவை |

## வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் நோக்கங்கள்

- ஒழுக்காறு மற்றும் சட்டப்பேறுற்ற சாரதிகள் உருவாக்குவதனூடாக உயர் தரம்வாய்ந்த சாரதி சேவையொன்றை உருவாக்குவதற்காக தேவையான பின்னணி தயாரித்தல்.

- மோதிவிட்டு தப்பி ஓடியதால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக நிதியுதவி வழங்குதல் மற்றும் அத்தகைய விபத்துகளை குறைப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்.

- வீதி மற்றும் அங்கு கையாளப்படுகின்ற வாகனங்கள் மற்றும் போக்குவரத்து செய்கின்ற பயணிகள் உட்பட பாதசாரிகளின் பாதுகாப்புக்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை அடையாளங் காணல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

- வீதி பாதுகாப்பு தொடர்பாக தரவு சேகரித்தல், புலானாய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் சர்வதேச தேசிய ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.

- அரசு துறை, அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து தேசிய வீதி பாதுகாப்பு கொள்கை செயல்முறைப்படுத்துதல் மற்றும் தோற்றுவிக்கப்படும் பலவீனங்களைக் கட்டுப்படுத்துதல்

- வீதி விபத்துகளின் காரணமாக ஊனமுற்ற நபர்களின் புனர்வாழ்விற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

- வீதி பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் மற்றும் வீதிவிபத்துகளை கட்டுப்படுத்துவதற்குரிய பொருளாதார தொழில்நுட்ப மற்றும் சமூக ரீதியாக நடைமுறைப்படுத்த முடியுமான செயல்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் சூழல் நட்பார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றுவதற்காக நிதியுதவி மற்றும் ஆலோசனை வழங்கல்

- தேசிய போக்குவரத்து கொள்கையை தயாரிப்பது மற்றும் அதன் செயல்பாடுகளுக்கு பங்களிப்பு செய்தல்.

- வீதி பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை தயாரித்தல் மற்றும் திருத்தம் போன்ற செயற்பாடுகளுக்கு தேவையான பங்களிப்புகளை வழங்குதல்

## வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் செயல்நடவடிக்கைகள் மற்றும் அதிகாரங்கள்

வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் கடமைப்பாங்கு மற்றும் செயல்பட வேண்டிய முறைக் குறித்து 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1387/4 ஆம் இலக்கம் கொண்ட அரச அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த வர்த்தமானியின் மூலம் கட்டளையிடப்பட்டுள்ளவாறு வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப்பொறுப்புகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

(அ) பின்வருவன தொடர்பில் கணனி தரவுகள் களஞ்சியசாலையொன்றினை பராமரித்தல்

i. மோட்டார் வாகனங்களின் அளவு மற்றும் அவற்றின் சிறப்பியல்புகள் மற்றும் இணைப்பாக்கம்

ii. வீதி விபத்துக்கள்

iii. வீதிப் பாதுகாப்பு தொடர்பான உள்நாட்டு மற்றும் சர்வதேச புள்ளிவிபரங்கள்

(ஆ) வீதிப் பாதுகாப்பு விடயம் சம்பந்தமாக நூலகசாலையொன்றினைக் கொண்டு நடாத்துதல்.

(இ) தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக தகவல்களை ஒன்று திரட்டுதல், ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் கள பரிசோதனைகளை நடாத்துதல்.

(ஈ) தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளுக்கு உதவுதல்

(உ) சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளுக்கு உதவுதல்.

(ஊ) இணை சர்வதேச தாபனங்களுடன் உறவுகளை பேணுதல் மற்றும் அனுபவமிக்க சிறப்பறிவினை பரிமாற்றிக்கொள்ளல்.

(எ) வீதி பாதுகாப்பு மற்றும் சம்பந்தப்பட்ட விடயஎல்லை கருத்திட்டம் குறித்து பொறுப்பை ஏற்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அறிவு மற்றும் தகவல்களை வழங்குதல்.

(ஏ) வீதி பாதுகாப்புடன் தொடர்புடைய கருத்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்முறைப்படுத்துதல்

(ஐ) அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுக்குள் வீதி பாதுகாப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

(ஒ) அடையாளங் காணப்படாத வாகனங்கள் மூலம் விபத்துகளுக்கு ஆளாகிய ஆட்களுக்கு நஷ்டஈடு செலுத்துதல்

(ஓ) வீதி பாதுகாப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக நிதிசார் மற்றும் வேறு உதவிகளை பெறுதல்

(ஔ) வீதி பாதுகாப்புடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக அரசுக்கு மதியுரைகளை வழங்குதல்.

## 2022 ஆம் ஆண்டுக்குள் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் செயல்பாடுகள்

### 01. வீதி விபத்துகளைக் குறைப்பது தொடர்பில் ஆய்வுகளை நடாத்துதல்.

மோட்டார் சைக்கிள் விபத்துக்களை குறைப்பதற்கான இரண்டாம் கட்ட ஆய்வு பணிகளுக்கான அறிக்கை மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் பீடத்தினால் தேசிய வீதி பாதுகாப்பு சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது ஆய்வுப் பணியாக, "பாதசாரி விபத்துகளைக் குறைப்பதற்கான" இரண்டு ஆராய்ச்சிகளை செயல்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சி முன்மொழிவு (Project Proposal) மற்றும் பத்திரிகை அறிவித்தல் உசாத்துணை பெறுகைக் குழுவால் தயாரிக்கப்பட்டு வருகிறது.




மோட்டார் சைக்கிள் விபத்துக்களை குறைப்பதற்கான ஆய்வுப் பணிகள் குறித்த கூட்டங்களை நடத்துதல்.

### 02. நாடு பூராவும் உள்ளடங்கக் கூடிய வகையில் இலங்கை பொலிஸ் பிரிவுடன் இணைந்து வீதி போக்குவரத்து தரவு முகாமைத்துவ அமைப்பை நிறுவுதல்.

இலங்கை போக்குவரத்து பொலிஸ் தலைமையகத்தின் மூலம் மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் தற்போது செயல்படுத்தப்படுகின்ற ''இலங்கை தரவு பகுப்பாய்வு முகாமைத்துவ முறைமை**(SLADMS)** '' நாடு முழுவதும் உள்ளடக்கக் கூடிய வகையில் செயல்படுத்துவதற்காக இலங்கை பொலிஸ் பிரிவினருக்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.




வீதி விபத்து தரவு முகாமைத்துவ அமைப்பை நிறுவுதல்.

## 03. வீதி பாதுகாப்பு தொடர்பான மின்னணு நூலகத்தை இற்றைப்படுத்துதல்

வீதி பாதுகாப்பு தொடர்பான மின்னணு நூலகம் (**E-Library) 2021.12.01** ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச பாதிக்கப்பட்டவர்களை நினைவூட்டும் தினத்திற்கு இணைவாக கொட்டாவை மாகும்புர பல்மாதிரி போக்குவரத்து மையத்தில் நடைபெற்ற கொண்டாட்டங்களுடன் இணைவாக நிறுவப்பட்டது.

பல்கலைக்கழகங்களால் வீதி விபத்துகளைக் குறைப்பது குறித்த 16 ஆய்வறிக்கைகள் மின் நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. (**Upload)**

## 04. கிராமப்புற வீதிகள் அண்டியதாக இடம்பெறுகின்ற வாகன விபத்துகளைக். கட்டுப்படுத்துவதற்காக மாவட்ட செயலக மட்டத்திலும் பிரதேச செயலக மட்டத்திலும் கட்டமைப்பை அமைத்தல்

நாடளாவிய ரீதியில் உள்ள 340 பிரதேச செயலகங்களில் 256 பிரதேச செயலகங்கள் வீதி பாதுகாப்பு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களை நியமித்து வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைக்கு அனுப்பிவைத்துள்ளதுடன், மேல் மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளுக்கு 2022.11.22 ஆம் திகதி கம்பஹா மாவட்ட செயலகத்தில் அவர்களின் கடமைப்பாங்கினை தெளிவுபடுத்துவதற்காக விழிப்பூட்டும் நிழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. ஏனைய மாகாணங்களுக்கான அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.







கம்பஹா மாவட்ட செயலகத்தில் மேல் மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச செயலக அதிகாரிகளை விழிப்பூட்டல்

## 05. மாகாண வீதிப் பாதுகாப்புப் அலகினூடாக நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்

தென் மாகாண வீதிப் பாதுகாப்புப் அலகின் மூலம் ஈடுபடுத்தியுள்ள பொது போக்குவரத்து சேவையில் பணிபுரிகின்ற ஓட்டுநர் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் நிதி பங்களிப்புடன் (ரூ. 129,738) 2022.06.25 மற்றும் 26 ஆகிய இரு நாட்களுக்குள் காலி கரீடாஸ் நிறுவனத்தில் நடைபெற்றது.

மாகாண வீதிகள் பாதுகாப்பு அலகின் ஊடாக பகிர்ங்க இடங்களில் LED பலகைகள் மற்றும் தரிப்பிடங்களில் **LED TV** மூலம் பிரபல்யப்படுத்துவதற்காக 15 குறும்பட வீடியோக்கள் தயார்செய்வதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதுடன், தயரிக்கப்பட்டுள்ள திருத்தங்களைச் சமர்ப்பிக்க குறும்பட வீடியோக்கள் திருத்தங்களை சமர்பிப்பதற்கு வீதி பாதுகாப்பு தொடர்பான சபைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.





பொது போக்குவரத்து சேவையிலுள்ள ஓட்டுனர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 2022.06.25 -2022.06.26

## 06. புகையிரத கடவையுள்ள வீதிகள், புகையிரத நிலையங்கள் மற்றும் புகையிரத வீதிகள் உள்ள இடங்களில் விழிப்பூட்டும் பலகைகளை நிறுவும் நிகழச்சித்திட்டம்

புகையிரத திணைக்களத்தின் வேண்டுகோளின் பிரகாரம், புகையிரத வீதியில் ஏற்படுகின்ற விபத்துகளை குறைப்பதற்காக பாதசாரிகள் மற்றும் பயணிகளை விழிப்பூட்டுவதற்கான பலகைகள் 80 புகையிரத நிலையங்களில் மற்றும் 160 புகையிரத கடவைகளில் 480 பலகைகள் நிறுவப்பட்டுள்ளன











புகையிரத நிலையங்கள் மற்றும் புகையிரத கடவையுள்ள உள்ள இடங்களில் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் நிறுவப்பட்டுள்ள பலகைகள்

## 07. வாகன விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்ற பகுதிகளில் விழிப்பூட்டும் பலகைகளை நிறுவுதல்

### 7.1 விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்ற கஹதுடுவை அண்டியதாக ரிலாவல சந்தி, இரத்தினபுரி பொலிஸ் அதிகார பிரதேசத்தில் வாகன விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்ற பகுதிகளில் பலகைகளை நிறுவுதல்

விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்ற சந்தியாக ஊடகங்கள் மூலம் பெற்ற தகவல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட கஹதுடுவை அண்டியதாக ரிலாவல சந்தியில் ஓட்டுநர்களை விழிப்பூட்டும் 7 பலகைகள் மற்றும் இரத்தினபுரி பொலிஸ் அதிகார பிரதேசம் அண்டியதாக 6 இடங்களில் விழிப்பூட்டும் பலகைகள் 12 நிறுவப்பட்டுள்ளன. உரிய பலகைகள் நிறுவியதன் பின்னர் ரிலாவல சந்தியில் ஒரு வீதி விபத்து மாத்திரமே அறிக்கையிடப்பட்டுள்ளது.




படம் 9 – வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் ரிலாவல சந்தி அண்டியதாக நிறுவப்பட்டுள்ள விழிப்பூட்டும் பலகைகள்

Kahawatte

Colombo To Kahawatte




Bimpallahena - Rathnapura Pamadura Road

Panadura Road To Rathnapura Road



Kahawatte To Colombo



Rathnapura Road To Panadura Road




படம 10 – வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் இரத்தினபுரி பொலிஸ் அதிகாரப் பிரதேசம் அண்டியதாக நிறுவப்பட்டுள்ள விழிப்பூட்டும் பலகைகள்

## 7.2 மோட்டார் வாகன பொலிஸ் / ஏனைய நிறுவனங்களின் மூலம் அடையாளங் காணப்பட்ட, வீதி விபத்துக்கள் அதிகம் இடம்பெறுகின்ற பிரதேசங்களில் விழிப்பூட்டும் பலகைகளை நிறுவுதல்.

தெனியாய பொலிஸ் அதிகார பிரதேசத்தில் வாகன விபத்துக்கள் அதிகமாக இடம்பெறுகின்ற 10 இடங்களில் ஓட்டுநர்களை விழிப்பூட்டும் 20 பலகைகள் நிறுவப்பபட்டுள்ளன.







வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் தெனியாய பொலிஸ் அதிகார பிரதேசத்தில் வாகன விபத்துக்கள் அதிகமாக இடம்பெறுகின்ற இடங்களில் நிறுவப்பட்டுள்ள விழிப்பூட்டும் பலகைகள்.

## 08. பாடசாலை வீதி பாதுகாப்பு நிகழச்சித்திட்டங்களைச் செயல்படுத்துதல்

பாடசாலை வீதி பாதுகாப்பு வலயங்களை நிறுவுதல் மற்றும் அதற்கு இணைவாக வீதி பாதுகாப்பு தொடர்பாக பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

| தொடர் இல | திகதி | செயலமர்வு நடாத்தப்பட்ட பாடசாலை |
|---|---|---|
| 01 | 2022.03.18 | தெனியாய மத்திய வித்தியாலயம் |
| 02 | 2022.03.19 | தெனியாய இராபக்ஷ வித்தியாலம் |
| 03 | 2022.09.19 | தபுளை பனாபிட்டிய மகா வித்தியாலயம் |
| 04 | 2022.10.01 | மாவனெல்லை மெடெரிகம கல்லூரி |
| 05 | 2022.10.03 | ருவன்வெல்ல ராஜசிங்ஹ மகா வித்தியாலயம் |




வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் நிறுவப்பட்டுள்ள வீதிப் பாதுகாப்பு வலயங்கள்



வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் நடாத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம்.

## 09. வீதி பாதுகாப்பு தேசிய வாரத்துடன் தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்களைச் செயல்படுத்துதல்

சகல மாதங்களிலும் நொவெம்பர் மாதத்தில் மூன்றாம் ஞாயிறு தினத்தன்று எழும் வீதி விபத்துகளுக்கு ஆளாகி பாதிக்கப்படுவோரை நினைவூட்டும் சர்வதேச தினத்திற்கு இணைவாக 2022 ஆம் ஆண்டில் நொவெம்பர் 21 முதல் 25 வரை வீதி பாதுகாப்பு வாரம் நடாத்தப்பட்டது. றுதி வாரத்தில் நிகழ்ச்சித்திட்டமொன்றினை செயல்படுத்துவதற்கு வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதன் தொடக்க விழா 2022.11.21 ஆம் திகதி மாகும்புர பல்மாதிரி போக்குவரத்து நிலையத்தில் கௌரவ இராஜாங்க அமைச்சர் திரு.லசந்த அழகியவண்ண அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. அதன்படி, கீழே பல நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்தும் பணியில் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை ஈடுபட்டது.
கௌரவ இராஜாங்க அமைச்சர் திரு.லசந்த அழகியவண்ண அவர்களின் தலைமையில்

### 9.1 வீதி விபத்துகள் பற்றிய சுவரொட்டி சித்திர போட்டியை நடத்துதல்.

சர்வதேச பாதிக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு, நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் தரம் 9 க்கு மேலுள்ள பிள்ளைகளுக்காக வீதி விபத்துகளைக் குறைப்பது தொடர்பான சுவரொட்டி சித்திர போட்டி நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய, 246 பாடசாலை விண்ணப்பதாரர்கள் போட்டியில் கலந்து கொண்டு, வெற்றி பெற்ற பிள்ளைகளுக்காக பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.






**வீதி விபத்துகள் பற்றிய சுவரொட்டி சித்திர போட்டி- மாகும்புர பல்மாதிரி போக்குவரத்து நிலையம்**

## 9.2 வீதி விபத்துக்களுக்கு ஆளாகிய குறைந்த வருமானம் பெறுநர்களுக்கு நிதி நிவாரணம் வழங்குதல்.

வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையினால் வீதி விபத்துக்களில் சிக்கிய குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நிதி நிவாரணம் கொழும்பு மாவட்டம் மற்றும் கம்பஹா மாவட்டத்தை மையமாக வைத்து வழங்கப்பட்டது. அங்கு கொழும்பு மாவட்டத்தில் உள்ள குறைந்த வருமானம் பெறும் 13 பேருக்காக ரூ.195,000.00 தொகை மாகும்புர பல்மாதிரி போக்குவரத்து நிலையத்தில், மாண்புமிகு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண அவர்களின் தலைமையில் வழங்கப்பட்டது.

கம்பஹா மாவட்டத்தை மையமாக வைத்து வீதி விபத்துக்களில் சிக்கிய குறைந்த வருமானம் பெறும் 26 பேருக்காக ரூ. 390,000.00 தொகை கௌரவ இராஜாங்க அமைச்சர் திரு.லசந்த அலகியவண்ண அவர்களின் தலைமைத்துவத்தில் கம்பஹா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.





வீதி விபத்துக்களில் ஆளாகிய குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிதி நிவாரணம் வழங்குதல் - மாகும்புர பல்மாதிரி போக்குவரத்து நிலையம்



வீதி விபத்துக்களில் ஆளாகிய குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நிதி நிவாரணம் வழங்குதல் - கம்பஹா மாவட்ட செயலகம்

## 9.3 பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள சாரதிகளுக்கான மருத்துவ கிளினிக்கை நடாத்துதல்

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்துடன் இணைந்து பொது போக்குவரத்தில் ஈடுபடும் சாரதிகளுக்காக மாகும்புர பல்மாதிரி போக்குவரத்து நிலையத்தில் வைத்திய சிகிச்சை நிலையம் ஒன்று இடம்பெற்றதுடன், அதற்காக 100 ஓட்டுநர்கள் கலந்து கொண்டனர். அங்கு ஓட்டுநர்களின் உயரம், எடை, இரத்தம், கண் பரிசோதனை, ரத்த அழுத்தம் உள்ளிட்டவை பரிசோதிக்கப்பட்டன.

## 9.4 பொது போக்குவரத்து சேவை ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல்.

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையும் இலங்கை போக்குவரத்து சபையும் இணைந்து பொது போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் சாரதிகளுக்காக வீதி விபத்துக்களை குறைப்பது தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றை வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவரின் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவரின் தலைமைத்துவத்தில் மற்றும் 2022.11.23 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக 100 சாரதிகள் கலந்துகொண்டனர்.





இலங்கை போக்குவரத்து சபையின் ஓட்டுநர்களை விழிப்பூட்டல் -  இலங்கை போக்குவரத்து சபையின் தலைமை அலுவலகம்

## 9.5 கொழும்பு மாநகர சபையின் வீதி பாதுகாப்பு சிறுவர் பூங்காவிற்கு சைக்கிள்கள் வழங்குதல்

பாதுகாப்பான முறையில் வீதியினை கையாளுவது தொடர்பாக பாடசாலை தருணம் முதல் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக வீதி பாதுகாப்பு தொடர்பாக தேசிய சபை மற்றும் கொழும்பு மாநகர சபையும் இணைந்து விகாரமஹாதேவி பூங்காவில் வீதிப் பாதுகாப்பு சிறுவர் பூங்காவை நிறுவியதுடன் ,அதற்குத் தேவையான சைக்கிள்கள் வழங்குதல் 2022.11.29 ஆம் திகதி போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண அவர்களின் தலைமைத்துவத்தில் மற்றும் கொழும்பு மாநகர முதல்வர் திருமதி ரோசி சேனாநாயக்க அவர்களின் பங்கேற்பில் கொழும்பு விகாரமகாதேவி சிறுவர் பூங்காவில் இடம்பெற்றது. இதில் கொழும்பை சுற்றியுள்ள பாடசாலைகளின் பாடசாலை மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.



கொழும்பு மாநகர சபையின் வீதி பாதுகாப்பு சிறுவர் பூங்காவிற்கு சைக்கிள்கள் வழங்குதல் - விகாரமகாதேவி சிறுவர் பூங்கா

## 9.6 இரத்த தானம் வழங்கும் நிகழச்சித்திட்டமொன்றினைச் செயல்படுத்துதல்

சர்வதேச பாதிக்கப்பட்டோர் வாரத்தை முன்னிட்டு, 2022.11.25 ஆம் திகதி இரத்த தான நிகழ்ச்சித்திட்டமொன்று மாண்புமிகு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண அவர்களின் தலைமைத்துவத்தில், மருதானையில் உள்ள போக்குவரத்து இராஜாங்க அமைச்சின் வளாகத்தில் இடம்பெற்றது. 9.1




இரத்த தானம் வழங்கும் நிகழச்சித்திட்டம் - மருதானை போக்குவரத்து இராஜாங்க அமைச்சு வளாகத்தில்

## 10. மோதிவிட்டு தப்பிச்செல்கின்ற வாகனங்களிலிருந்து விபத்துகளுக்கு ஆளாகின்ற நபர்களுக்கு நிதி நிவாரணங்களை வழங்குதல்

நிலையியற் குழுவின் மற்றும் தேசிய சபையின் அங்கீகாரம் பெற்ற பாதிக்கப்பட்டவர்களுக்காக 2022 ஆம் ஆண்டு தொடர்பாக 6 சந்தர்ப்பங்களில் நிதி நிவாரணம் வழங்கப்பட்டது.

| திகதி | இடம் | பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | செலுத்திய இழப்பீடு தொகையாக ரூ. இலட்சங்கள் |
|---|---|---|---|
| 2022.03.29 | மருதானை போக்குவரத்து இராஜாங்க அமைச்சு அமைந்துள்ள, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை அலுவலகம் | 13 | 2,450,000.00 |
| 2022.05.26 | மருதானை போக்குவரத்து இராஜாங்க அமைச்சு அமைந்துள்ள, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை அலுவலகம் | 15 | 3,050,000.00 |
| 2022.08.30 | மருதானை போக்குவரத்து இராஜாங்க அமைச்சு அமைந்துள்ள, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை அலுவலகம் | 14 | 2,300,000.00 |
| 2022.10.31 | மருதானை போக்குவரத்து இராஜாங்க அமைச்சு அமைந்துள்ள, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை அலுவலகம் | 15 | 2,650,000.00 |
| 2022.11.21 | மாகும்புர பல்மாதிரி போக்குவரத்து நிலையம் | 12 | 2,650,000.00 |
| 2022.12.23 | மருதானை போக்குவரத்து இராஜாங்க அமைச்சு அமைந்துள்ள, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை அலுவலகம் | 5 | 1,150,000.00 |
| **மொத்தம்** | | **74** | **14,250,000.00** |





மோதிவிட்டு தப்பியோடிய வாகனங்களால் ஏற்படும் விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி நிவாரணம் வழங்குதல் - மாகும்புர பல்மாதிரி போக்குவரத்து நிலையம்.

## 11. அதிவேக நெடுஞ்சாலையில் பயணம் செய்யும் ஓட்டுநர்களை விழிப்பூட்டுவதற்காக கையேடுகளை அச்சிடப்பட்டு மோட்டார் வாகன பொலிஸ் தலைமையகத்துக்கு வழங்குதல்.


அதிவேக நெடுஞ்சாலையில் பயணம் செய்யும் ஓட்டுநர்களை விழிப்பூட்டுவதற்காக 1.7 ரூபா மில்லியன் செலவில் 200,000 துண்டுப் பிரசுரங்களை அச்சிடப்பட்டு உரிய துண்டுப் பிரசுரங்களை பகிர்தளிப்பதற்காக பணிப்பாளர், அதிவேக நெடுஞ்சாலை பிரிவுக்கு வழங்கப்பட்டிருப்பதுடன், தேசிய பொலிஸ் தினம் முன்னிட்டு செயல்படுத்தப்படுகின்ற ஒரு நிகழ்ச்சித்திட்டமாக 2022.09.05 ஆம் திகதி கொட்டாவை அதிவேக நெடுஞ்சாலை துவங்கும் இடத்தில் அதன் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது




2022.09.05 ஆம திகதி கொட்டாவை அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலில் அதிவேக நெடுஞ்சாலையில் பயணம் செய்யும் ஓட்டுநர்களை விழிப்பூட்டும் துண்டுப்பிரசுரங்களை பகிர்ந்தளித்தல்

## 12. புதிய ஓட்டுநர் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் ஓட்டுநர் உரிமங்களுக்கு விண்ணப்பிப்வர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் விழிப்பூட்டுத் நிகழ்ச்சித்திட்டமொன்றினைச் செயல்படுத்துதல்.

புதிய மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர்கள் மற்றும் ஓட்டுநர் உரிமம் விண்ணப்பதாரர்கள் ஓட்டுநர் உரிமத்திற்கு விண்ணப்பிக்கும் நேரத்திலுமம் உரிமம் பெறும் நேரத்திலும் குறுஞ்செய்தி மூலம் தெரிவிப்பதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆதரவுடன் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 1.5 மில்லியன் ரூபா நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகின்ற குறுஞ்செய்திகள் (SMS) மூலம் விழிப்புணர்வு திட்டத்தை செயல்படுத்துவதற்காக இது வரை, கொள்முதல் செயல்முறை முடிக்கப்பட்டு மொபிடெல் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.




ஓட்டுநர்களை விழிப்புணர்வூட்டுவதற்காக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் மூலம் ஓட்டுநர் உரிம விண்ணப்பதாரர்கள் மற்றும் ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர்களுக்கு அனுப்பும் குறுஞ்செய்தி.

## 13. வீதி விபத்துக்கள் தொடர்பாக மற்றும் மோதிவிட்டு தப்பிச் செல்கின்ற வீதி விபத்தொன்றின்போது செலுத்தப்படுனற நிதி நிவாரணத் திட்டம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

மோதிவிட்டு தப்பிச் செல்கின்ற வாகன விபத்துகளுக்கு ஆளாகின்ற நபர்களுக்காக இழப்பீடு வழங்குவது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சிங்கள மற்றும் தமிழ் ஊடகங்களில் விழிப்புணர்வூட்டும் X- பலகைககள் மற்றும் 2.16 செலவில் 50,000 துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டிருப்பதுடன், அதனை இலங்கை பொலிஸாருக்கு விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன




படம் 15 - மோதிவிட்டு தப்பிச் செல்கின்ற வாகன விபத்துகளுக்கு ஆளாகின்ற நபர்களுக்காக வழங்கப்படுகின்ற இழப்பீடு வழங்குதுடன் தொடர்புடைய துண்டுப்பிரசுரம்



மோதிவிட்டு தப்பிச் செல்கின்ற வாகன விபத்துகளுக்கு ஆளாகின்ற நபர்களுக்காக வழங்கப்படுகின்ற இழப்பீடு வழங்குதுடன் தொடர்புடைய X- பலகைககள்

## 14. லொரி ஓட்டுநர்கள், முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் போன்றவர்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயல்படுத்துதல்.

வீதி விபத்துகளுக்காக அதிகம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள லொரி ஓட்டுநர்களுக்கு வீதி பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக 0.5 ரூ.மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2022.09.02 ஆம் திகதி 151,900 ரூபா செலவில் மனம்பிட்டிய மகாவலி ‘‘பிரதிபா’’ மண்டபத்தில் நடைபெற்றது.





மனம்பிட்டிய மகாவலி ‘‘பிரதிபா’’ மண்டபத்தில் 2022.09.02 ஆம் திகதி நடாத்தப்பட்ட லொரி ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

## 2022 வருடத்துக்குள் நாடு பூராவும் ஏற்பட்டுள்ள விபத்துகளின் அளவு

| வருடம் | கொடிய | தீவிரமான | சிறிய | நட்டம் | மொத்தம் | உயிரிழந்தோர் |
|---|---|---|---|---|---|---|
| 2022 | 2395 | 6231 | 8209 | 5118 | 21953 | 2515 |

## 2022 ஆம் ஆண்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை

| | **2022** |
|---|---|
| மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் | **865** |
| பின்னிருக்கையாளர்கள் | **200** |
| பாதசாரிகள் | **674** |
| பயணிகள் | **297** |
| சாரதிகள் | **217** |
| சைக்கிள் ஓட்டுநர்கள் | **225** |
| ஏனையவை | **37** |
| **மொத்தம்** | **2515** |

| 2022 வருடத்தில் ஏற்பட்ட அழிவார்ந்த விபத்துகளுக்கு பொறுப்பாகவுள்ள வாகனங்கள் | |
|---|---|
| **பொறுப்பாகவுள்ள வாகனங்கள்** | **2022** |
| | **கொடிய விபத்துகளின் எண்ணிக்கை** |
| மோட்டார் சைக்கிள்கள் | 908 |
| லொறி | 320 |
| முச்சக்கரவண்டி | 285 |
| இரட்டை நோக்கம் கொண்ட வாகனங்கள் | 271 |
| கார் | 227 |
| தனியார் பேருந்துகள் | 172 |
| இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் | 63 |
| டிராக்டர் | 29 |
| மிதிவண்டிகள் | 29 |
| கொள்கலன் | 29 |
| நில வாகனங்கள் | 08 |
| மோதிவிட்டுச் செல்லுதல் | 54 |
| மொத்தம் | **2395** |

**வீதி பாதுகாப்பு நிதியத்திற்கு பங்களிப்பை வழங்குகின்ற பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி கம்பனிகள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | வ/ அமானா தக்காபுல் காப்புறுதிக் கம்பனி | - | இல. 660/1, காலி வீதி, கொழும்பு – 03 |
| 02. | அலையன்ஸ் காப்புறுதிக் கம்பனி | - | இல.675, டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு – 09 |
| 03. | செலிங்கோ காப்புறுதிக் கம்பனி | - | 3ஆம் மாடி, "செலிங்கோ ஹவுஸ்" இலக்கம்: 69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு – 01 |
| 04. | கொன்டினென்டல் காப்புறுதிக் கம்பனி | - | இல., 79 சீ.டப்ளியு. டப்ளியு கன்னங்கர மாவத்தை, கொழும்பு -07 |
| 05. | வ / கூட்டுறவு காப்புறுதிக் கம்பனி | - | "ரக்ஷன நிவாச'' - இலக்கம்: 74/05, க்ராண்ட்பாஸ் வீதி, கொழும்பு – 14 |
| 06. | வ / ஹற்றன் நஷனல் காப்புறுதிக் கம்பனி | - | இல 30, ஸ்ரீ உத்தரானந்த மாவத்தை, கொழும்பு – 03 |
| 07. | எல். ஓ.எல். சீ காப்புறுதிக் கம்பனி | - | இல. 481, டி.பீ ஜாயா மாவத்தை, கொழும்பு -10 |
| 08. | தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் | - | இல, 95, சித்தம்பலம் UPTO ஹவுஸ் , ஸ்ரீ சித்தம்பலம் ஏ. கார்டன் மாவத்தை, கொழும்பு -02 |
| 09. | எம். பீ. எஸ். எல். காப்புறுதிக் கம்பனி | - | இல, 519, டி.பீ.ஜாயா மாவத்தை, கொழும்பு - 07 |
| 10. | ஓரியண்ட் காப்புறுதிக் கம்பனி | - | இல, 133, புதிய புலர்ஸ் வீதி, கொழும்பு – 04 |
| 11. | மக்கள் காப்புறுதிக் கம்பனி | - | இல. 07, ஹெவ்லொக் வீதி, கொழும்பு -05 |
| 12. | வ / சணச காப்புறுதிக் கம்பனி | - | இல 172, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு -08 |
| 13. | இலங்கை காப்புறுதிக் கம்பனி | - | இல. 21, வோக்சோல் வீதி, கொழும்பு -02 |
| 14. | பெயார்பஸ்ட் காப்புறுதிக் கம்பனி | - | இல. 33, சென் மைக்கல் வீதி, கொழும்பு 03. |

# 2022 வருடாந்த கணக்குகள்

**வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை**
**2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி நிலை அறிககைககளுக்கான கூற்று**

| | குறிப்புகள் | 2022<br>ரூபா | 2021<br>(மீள் வகுத்துரை)<br>ரூபா |
|---|---|---|---|
| கிடைப்பனவுகள் | | | |
| காப்புறுதி கம்பனிகளிடமிருந்து கிடைத்த பங்களிப்பு | 3 | 72,177,175.66 | 51,719,745.46 |
| ஏனைய வருமானங்கள் | 4 | 58,390,437.91 | 22,081,742.45 |
| **மொத்த வருமானம்** | | **130,567,613.57** | **73,801,487.91** |
| **கழி - செலவினம்** | | | |
| நிர்வாகச் செலவினங்கள் | 5.1 | 11,748,469.91 | 8,062,673.54 |
| வீதி பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | 5.2 | 49,709,582.20 | 40,233,821.35 |
| **செலவினத்தையும் பார்க்க வருமானத்தின் மிகை** | | **69,109,561.46** | **25,504,993.02** |

## வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை

## 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில்


## நிதி நிலைமைக் கூற்று


| | குறிப்புகள் | 2022 | 2021 |
|---|---|---|---|
| | | | (மீள் வகுத்துரை) |
| | | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 6 | 1,918,738.56 | 5,308,722.68 |
| சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் | | | |
| | | **1,918,738.56** | **5,308,722.68** |
| මුළු ජංගම නොවන වත්කම් | 7 | 321,543,535.44 | 282,381,122.40 |
| திறைசேரி உண்டியல்கள் | 8 | 185,167,086.79 | 177,523,869.46 |
| நிலையான வைப்புகள் | | | |
| **நடைமுறை சொத்துக்கள்** | 3 | 6,038,024.51 | 7,037,439.32 |
| காப்புறுதி கம்பெனிகளிடமிருந்து கிடைக்க வேண்டியவைகள் | 7 | 7,671,047.22 | 1,763,859.33 |
| கி.வே.திறைசேரி உண்டியல்களின் வட்டி | 8 | 8,043,475.95 | 3,782,897.38 |
| கி.வே.'. நிலையான வைப்புகக்ளின் வட்டி | | 26,783.09 | 133,375.08 |
| முன் கொடுப்பனவுகள் | 9 | 47,858,688.01 | 31,111,579.92 |
| வங்கியிலுள்ள காசு | | **69,638,018.78** | **43,829,151.03** |
| மொத்த நடைமுறை சொத்துக்கள் | | | |
| குறைப்பனவுகள் – நடைமுறை பொறுப்புகள் | | 221,400.00 | 200,000.00 |
| செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டன | | 127,546.45 | 32,818.91 |
| செ.வேண்டிய ஏனைய கொடுப்பனவுகள் | | 348,946.45 | 232,818.91 |
| மொத்த சொத்துக்கள் | | **577,918,433.12** | **508,810,046.66** |
| வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் நிதிக் கணக்கு | | | |
| நிதியியல் கணக்கு நிலுவை மு.கொ. | | 508,808,871.66 | 483,303,878.64 |
| செலவினத்திலும் பார்க்க வருமானத்தின் மிகை | | 69,109,561.46 | 25,504,993.02 |
| **மொத்த நிதியீடு** | | **577,918,433.12** | **508,808,871.66** |

சிறப்பு கணக்கியல் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 5 முதல் 14 வரை உள்ள குறிப்புகள் இந்த நிதிநிலை கூற்றுகளைச் சேர்ந்தவை

**சான்றுபடுத்தல்கள்**

மேற்குறிப்பிட்ட நிதிக் கூற்றுகள் மூலம் 2021 திசெம்பர் 31 திகதி வரையிலான நடவடிக்கைகள் தொடர்பாக உண்மையானதும் நியாயமானதுமான கருத்துரை சமர்ப்பிக்கப்படுகின்றதென்பது குறித்து மற்றும் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான மிகை ∴(பற்றாக்குறை குறித்து உறுதிப்படுத்துகின்றோம். இந்த நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் இந்தச் சபையின் பொறுப்பாகும். இந்த நிதிக் கூற்றுகள் சபையால் அங்கீகரித்து கையொப்பமிடப்பட்டுள்ளது.








கணக்காளர் (க.மே) தலைவர்

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை

## வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை

## 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான மறைமுக காசு பாய்ச்சல் சுற்று

| | 2022 | 2021 |
|---|---|---|
| | | (மீள் வகுத்துரை) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான நிதிப் பாய்ச்சல் | ரூபா | ரூபா |
| வரிக்கு முன்னரான இலாபம் | 69,109,561.46 | 25,504,993.02 |
| சீராக்கங்கள் | | |
| ஆரம்ப வருடத்தின் சீராக்கங்களுக்கான (தேறிய) | (1,175.00) | - |
| தேய்மானம் | 810,629.91 | 1,229,117.82 |
| நிலையான வைப்புக்கள் வழங்கல் | 3,803,686.15 | - |
| வட்டி வருமானம் | (58,390,437.91) | (22,081,742.45) |
| **செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்படு இலாபம்** | 15,332,264.61 | 4,652,368.39 |
| **செயற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| ஏனைய கிடைக்க வேண்டிய வைகளின் குறைவுகள்/ (அதிகரித்தல்கள்) | (9,061,759.66) | (2,675,983.80) |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய வைகளின் குறைவுகள்/ (அதிகரித்தல்கள்) | 116,127.54 | (149,104.74) |
| **செயற்பாடுகள் மூலம் உழைக்கின்ற தொகை** | (8,945,632.12) | (2,825,088.54) |
| | - | - |
| செயற்பாடுகளின் மூலமான தேறிய தொகை | 6,386,632.49 | 1,827,279.85 |
| முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலமான காசு பாய்ச்சல் | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | (1,224,331.94) | (40,324.00) |
| வட்டி கிடைப்பனவுகள | 58,390,437.91 | 22,081,742.45 |
| நிலையான வைப்புக்களின் மீள் முதலீடு | (7,643,217.33) | (34,722,264.26) |
| திறைசேரி உண்டியல்கள் மீள முதலீடு செய்தல் | (39,162,413.04) | (13,306,201.93) |
| முதலீட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திய தேறிய தொகை | 10,360,475.60 | (25,987,047.74) |
| நிதிசார் நடவடிக்கைகளின் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| பங்கு மூலதனம் வெளியிடுவதன் மூலம் பெறும் நிதி | - | - |
| நீண்டகால கடன் பெற்றுக்கொள்வதன் மூலம் பெறும் நிதி | - | - |
| நிதிசார் குத்தகை கடப்பாடுகளின் கொடுப்பனவுகள் | - | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | - | - |
| நிதிசார் செயற்பாடுகளின்போது பயன்படுத்திய தேறிய தொகை | - | - |
| காசு மற்றும் காசு சார்ந்த தேறிய அதிகரிப்பு | **16,747,108.09** | **(24,159,767.89)** |
| காலப்பகுதி ஆரம்பத்தில் காசு மற்றும் காசு சார்ந்தவைகளும் | **31,111,579.92** | **55,271,347.81** |
| காலப்பகுதி இறுதியில் காசு மற்றும் காசு சார்ந்தவைகளும் | **47,858,688.01** | **31,111,579.92** |

**வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை**
**2022திசெம்பர் 31 ஆந் திகதியிற்கு**
**பங்கு மாற்றக்கணக்கு**

| | நிதியியல் கணக்கு | மொத்தம் |
|---|---|---|
| 2017/01/01திகதியில் மீதி | ரூ | ரூ |
| செலவினங்களிலும் பார்க்க வருமான மிகை | | |
| 2017/12/31 ஆந் திகதியில் மீதி | 260,040,799.57 | 260,040,799.57 |
| | | - |
| செலவினங்களிலும் பார்க்க வருமான மிகை (மீள மதிப்பீடு) | 40,561,344.97 | 40,561,344.97 |
| 2018/12/31 திகதியில் மீதி | 300,602,144.54 | 300,602,144.54 |
| செலவினங்களிலும் பார்க்க வருமான மிகை (மீண்டும் எடுத்துரைக்கப்பட்ட) | 59,487,763.56 | 59,487,763.56 |
| 2019/12/31 திகதியிற்கு நிலுவை (மீண்டும் எடுத்துரைக்கப்பட்ட) | 360,125,892.14 | 360,125,892.14 |
| செலவினங்களிலும் பார்க்க வருமான மிகை (மீண்டும் எடுத்துரைக்கப்பட்ட) | 61,315,294.39 | 61,315,294.39 |
| 2020/12/31 திகதியில் மீதி | 421,441,186.53 | 421,441,186.53 |
| செலவினங்களிலும் பார்க்க வருமான மிகை | 61,862,692.11 | 61,862,692.11 |
| 2021/12/31 திகதியில் மீதி | 483,303,878.64 | 483,303,878.64 |
| செலவினங்களிலும் பார்க்க வருமான மிகை (மீண்டும் எடுத்துரைக்கப்பட்ட) | 25,504,993.02 | 25,504,993.02 |
| 2021/12/31 திகதியில் மீதி | 508,808,871.66 | 508,808,871.66 |
| செலவினங்களிலும் பார்க்க வருமான மிகை | 69,109,561.46 | 69,109,561.46 |
| | - | - |
| 2022/12/31 திகதியில் மீதி | 577,918,433.12 | 577,918,433.12 |

**வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை**
**2022 திசெம்பர் 31 ஆந் திகதியிற்கு**
**பங்கு மாற்றக்கணக்கு**

**1 தாபன தகவல்கள்**

**1.1 பொது தகவல்கள்**

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை மோட்டார் வாகனங்கள் (திருத்தம்) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட அமைச்சின் கீழுள்ள சட்டபூர்வமான நிறுவனமாகும். தேசிய வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 01, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இடத்தில் அமைந்துள்ள அமைச்சின் கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளது.

**2 சிறப்பு கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்**

**2.1 பொது கணக்கியல் கொள்கைகள்**

**2.1.1 தயாரிப்பின் அடிப்படை**

இந்த நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாய் நிதி அலகினால் சமர்பிக்கப்பட்டிருப்பதுடன் அவை இலங்கையின் பட்டயக் கணக்காளர்களால் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க துறையின் கணக்குகள் பிரகாரம் வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**2.1.2 <u>இணக்கப்பாட்டு கூற்று</u>**

“2022 திசெம்பர் 31 ஆம் திகதியிற்கு மற்றும் அந்தத் தேதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமை,நிதி செயல்திறன், சமபங்கு மற்றும் பணப்புழக்கங்களில் மாற்றங்கள் மற்றும் சபையின் கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இலங்கை அரசாங்க துறை கணக்கியல் தரநிலைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.2 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படை**

**2.2.1 <u>சொத்து, ஆலை, உபகரணங்கள்</u>**

(அ) சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் திரட்டப்பட்ட தேய்மானத்தில் குறைக்கப்பட்ட செலவிற்கமைய பதிவுசெய்யப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டில் சொத்துக்களின் மறுமதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த தேதியில் இருந்த சொத்துகளில் இருந்து திரட்டப்பட்ட செலவினைக் குறைத்து மீள மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கமைய பராமரிக்கப்படுகிறது.

**(ஆ) <u>தேய்மானம்</u>**

தேய்மானத்திற்கான ஒதுக்கீடு ஒரு நேர்கோட்டு அடிப்படையில் கணக்கிடப்படுகிறது, சொத்தை பயனுறிதி வாய்ந்த முறையில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியுமான தேதியிலிருந்து கணக்கிடப்படுகின்ற , சொத்தின் பயனுறுதி வாய்ந்த ஆயுட்கலம் இந்த கொள்கை பிரயோகிக்கத்தக்கதாக உள்ளது.

பிரதான வருடாந்திர கட்டணம் பின்வருமாறு கையாளப்படுகின்றன

| | | |
|---|---|---|
| 1. | கணனிகள் | 25% |
| 2. | நிழற்படபிரதி / அச்சீட்டு இயந்திரம் | 12.5% |
| 3. | குளிரூட்டிகள் | 12.5% |
| 4. | இயந்திரங்கள் மறறும் ஏனைய சொத்துக்கள் | 12.5% |
| 5. | வீட்டு தளபாடங்கள் மற்றும் கருவிகள் | 10 % |
| 6. | சாரதி கற்றல் இயந்திரங்கள் | 10% |
| 7. | கெமரா உபகரணங்கள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் | 25% |
| 8. | வேறு ஊடக உபகணங்கள் | 12.5% |

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் தேய்மான விகிதங்கள்

**2.3 <u>முதலீடுகள்</u>**

வீதி பாதுகாப்பு நிதியத்துக்கு பங்களிப்புத்தொகை மாதாந்திர அடிப்படையில் காப்பீட்டு நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெறுவதுடன் மேலதிக நிதி திறைசேரி உண்டியல்களில மற்றும் இலங்கை வங்கியில் மற்றும் மக்கள் வங்கியில் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்படுகின்றன.

**(அ) தற்போதைய முதலீடுகள்**

தற்போதைய முதலீட்டுச் செலவின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் மற்றும் திறைசேரி உண்டியல்கிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானம் முதிர்ச்சியின் போது மீண்டும் முதலீடு செய்யப்படுகிறது.

**2.4 பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்**

நிதி நிலை அறிக்கையில் தற்போதைய பொறுப்புகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புகள் என்பது

நிதி நிலையின் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய காலம் முதிர்ச்சியடைகின்றமைக் குறித்து எதிர்பார்க்கின்ற கடப்பாடுகளாகும்

**2.4. 1 <u>செ.வே. பிற கொடுப்பனவுகள்</u>**

கடன்கொடுத்தோர்கள் மற்றும் பிற செலுத்த வேண்டியவைகள் அவர்ளுக்கு பொந்தும் வகையில் அந்தந்த புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்புகளிலிருந்து காட்டப்பட்டுள்ளன.

**2.4.2 ஏற்பபாடுகள்**

வளங்கள் வெளிப்பயர்ச்சல் காரணமாக இகடந்த கால நிகழ்வின் விளைவாக சபைக்கு தற்போதைய பொறுப்பு இருக்கும்போது ஏற்பாடுகள் கண்டறியப்படும். பொருளாதாரப் பலன்களை செயலுருப்படுத்துதல் கடப்பாடுளை தீர்ப்பதற்கு பொருளாதார பலன்கள் தேவைப்படுவதுடன் கடப்பாடுகள் அளவுக்கமைய நம்பகத்தன்மை வாய்ந்த மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியும்.

**2.5 வீதி பாதுகாப்பு நிதியத்தின் வருமானம்**

பதிவுசெய்யப்பட்ட வாகனக் காப்பீட்டு நிறுவனங்கள் அனைத்து மூன்றாம் தரப்பு காப்பீட்டுக் உறுதிகளிலிருந்து 1மூ வழங்கியுள்ளன. 2021 ஒக்டோபர் 01 முதல் இது 2மூ ஆக அதிகரிக்கும். காப்பீட்டு நிறுவனங்கள் அவர்கள் செலுத்த வேண்டிய மாதாந்திர பங்களிப்பு தவணைகள் அடுத்த மாதத்தின் 15 ஆம் திதகியிற்கு முன்னர் செலுத்த வேண்டும்.

**2.6 பதவியணி**

தேசிய வீதி பாதுகாப்பு செயலகம் என்பது வீதிபக் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை செயல்படுத்தும் நிறுவனமாகும். மற்ற துணை பதவியணியினர் அமைச்சின் வீதிப் பாதுகாப்பு செயலகத்திற்கு மாற்றப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர். போக்குவரத்து. அமைச்சு பதவியணியினரின சம்பளம் போக்குவரத்து அமைச்சினால் செலுத்தப்படுகின்றது.

**2.7 வழுக்கல்**

மன்றத்தின் முதல் நிதிநிலை அறிக்கைகளின் முற்கால நிகழ்வுக்குரிய பிழைகளை பின்வருவனவற்றினுாடாக வெளிப்படுத்தியதன் பின்னர் வெளியிடுவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(அ) பிழைகள் ஏற்பட்டுள்ள, முன்வைக்கப்பட்ட குறித்த காலப்பகுதிக்கான ஒப்பீட்டு அளவுகளை மீள எடுத்துரைத்தல்

(ஆ) முன்வைக்கப்பட்ட குறித்த காலத்திற்கு முன்பாக பிழைகள் ஏற்பட்டிருப்பின், முன்வைக்கப்பட்ட குறித்த காலத்திற்காக உரிய சொத்துகள், பொறுப்புகள் மற்றும் நிகர சொத்துகள் / சம பங்குகளின் தொடக்க நிலுவைகளை மீள எடுத்துரைத்தல்

இந்த வருடத்துக்குள் முன் நிதிககூற்றில் சிற்சில வழுக்கல் கண்டறியப்பட்டதுடன் அவை 2021 நிதிக்கூற்றுக்களுக்குள் மீள எடுத்துரைதததன் மூலம் திருத்தம் செய்யப்பட்டன..வழுவின் தன்மை , 2021 ஆம் ஆண்டில் முன்னர் சமர்பிக்கப்பட்ட மற்றும் மீள எடுத்தரைப்பதன் மூலம் நிதி நிலைமைப் பற்றிய கூற்றின் அடிப்படையில் ஏற்பட்ட தாக்கத்திற்கு உரிய நிலுவைகள் பின்வருமாறு சாராம்சப்படுத்தப்பட்டுள்ளன.

***2022 வருடத்தின் தவறுதல்களை திருத்தம் செய்ததன் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களின் தாக்கம் மற்றும் நிதி செயலாற்றுகைக் கூற்றின் மீது அதன் தாக்கம்***

## நிதி செயலாற்றுகைக் கூற்றின் மீது அதன் தாக்கம்

| **உருப்படி** | **குறிப்பு** | **மீள எடுத்துரைப்பதற்கு முன்னர் நிலுவை** | **சீராக்கங்கள்** | **மீள எடுத்துரைக்கப்பட்ட நிலுவை** |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| 2022 வருடத்துக்கு நிலையான வைப்பு வட்டி வருமானம் | 2.7 .1 | 8,373,694.00 | (495,296.00) | 7,878,398.00 |

| **செலவினங்கள்** | **குறிப்பு** | **மீள எடுத்துரைப்பதற்கு முன்னரான நிலுவை** | **சீராக்கங்கள்** | **மீள எடுத்துரைக்கப்பட்ட நிலுவை** |
|---|---|---|---|---|
| தேய்மானம் | 2.7.2 | 1,231,331.82 | (2,214.00) | 1,229,117.82 |

## நிதி நிலைமை கூற்றின் மீது அதன் தாக்கம்

| **உருப்படி** | **குறிப்பு** | **மீள எடுத்துரைப்பதற்கு முன்னர் நிலுவை** | **சீராக்கங்கள்** | **மீள எடுத்துரைக்கப்பட்ட நிலுவை** |
|---|---|---|---|---|
| கி.வே. நிலையான வைப்பு வட்டி | 2.7.1 | 4,278,193.42 | (495,296.00) | 3,782,897.42 |
| PPE | 2.7.2 | 5,306,508.68 | 2214.00 | 5,308,722.68 |

2.7.1 –J/E 16

2021 திசெம்பர் 31 ஆம் திகதியிற்கு நிலையான வைப்புக்களிலிருந்து கி.வே.வட்டி ரூபா 3,782,897.38 ஆக இருப்பதுடன் அது ரூபா 4,278,193.42 ஆக தவறுதலாக 2021 நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக நிலையான வைப்பு வட்டி ரூபா 495296.04 ஆன அதிக பெறுமதியால் பதிவு செய்யப்பட்டது. இது 2021 நிதிக்கூற்றுக்களில் மீள எடுத்துரைப்பதன் மூலம் திருத்தம் செய்யப்படும்.

2.7.2 – J/E 17

ஏனைய சொத்துக்களின் தேய்வு 2021ஆம் ஆண்டில் ரூபா 2,214.00 ஆக பெறுமதி பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் 2021 நிதிக்கூற்றுக்கள் மீள எடுத்துரைப்பதன் மூலம் திருத்தம் செய்யப்படுகின்றது.

## வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை
## 2022 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்
## 03. 2022 இற்காக காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு

| | குறிப்பு இல. | 2022<br>ரு | 2021<br>ரு |
|---|---|---|---|
| ஆண்டுக்குள் காப்பீட்டு பங்களிப்பு பெறுகை | 3.1 | 73,176,590.47 | 48,564,451.46 |
| காப்பீட்டு பங்களிப்பு சேரப்பனவுகள் | | | |
| கி.வே. காப்புறுதி பங்களிப்பு ஆரம்ப நிலுவைகளிலிருந்து | | 6,038,024.51 | 7,037,439.32 |
| | | 79,214,614.98 | 55,601,890.78 |
| குறைப்பனவு | | | |
| கி.வே. காப்புறுதி பங்களிப்பு ஆரம்ப நிலுவைகளிலிருந்து | | 7,037,439.32 | 3,882,145.32 |
| | | **72,177,175.66** | **51,719,745.46** |

***3.1ஆண்டுக்குள் காப்பீட்டு பங்களிப்பு பெறுகை***

| காப்புறுதி கம்பெனியின் பெயர் | சனவரி | பெப்ருவரி | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஆகஸ்ட் | செப் | ஒக் | நவ | திசெ | மொ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **எச்என்பி ஜெனரல் இன்சுவரன்ஸ் லிமிடெட்** | 239,500.00 | 202,910.00 | 199,725.00 | 197,965.00 | 135,570.00 | 125,490.00 | 196,865.00 | 192,435.00 | 225,350.00 | 157,962.00 | 151,824.00 | 157,803.00 | 2,183,399.00 |
| ஹட்டன் நெஷனல் காப்புறுதி நிறுவனம் | 321,728.02 | 287,528.86 | 295,260.13 | 300,493.70 | 237,308.35 | 215,217.87 | 212,765.46 | 196,205.65 | 792,057.58 | 244,326.24 | 233,057.78 | 259,271.04 | 3,595,220.68 |
| செலிங்கோ காப்புறதிக் கம்பனி | 824,135.32 | 867,868.00 | 812,939.00 | 820,184.00 | 523,000.80 | 509,661.00 | 547,382.00 | 725,083.00 | 925,539.00 | 710,988.00 | 891,746.00 | 750,831.00 | 8,909,357.12 |
| MBSL காப்புறுதிக் கம்பனி | - | 183,054.00 | 169,219.30 | | 79,749.80 | 153,368.50 | | 65,112.90 | 99,710.30 | 83,104.40 | 86,016.10 | 81,222.50 | 1,000,557.80 |
| கூட்டுறவு காப்புறுதி நிறுவனம் | 945,537.00 | 945,537.00 | 790,073.00 | 746,012.00 | 433,138.00 | 420,904.00 | 501,548.28 | 616,593.00 | 935,532.00 | 774,147.00 | 912,851.00 | 856,343.00 | 8,878,215.28 |
| ஓரியண்ட் காப்புறுதி நிறுவனம் | 92,370.64 | 279,202.72 | 163,951.92 | 153,841.36 | 96,351.64 | 105,156.88 | 127,846.68 | 118,486.88 | 135,272.56 | 160,512.04 | 151,383.56 | 156,635.44 | 1,741,012.32 |
| சனச காப்புறுதி நிறுவனம் | 271,883.32 | 258,812.44 | 237,622.10 | 241,210.70 | 183,923.60 | 147,333.76 | 184,083.88 | 181,023.88 | 307,907.64 | 217,256.54 | 242,478.60 | 214,293.54 | 2,687,830.00 |
| அலையன்ஸ் லங்கா கம்பனீ | 488,160.00 | 476,690.00 | 469,662.00 | 419,510.00 | 257,440.00 | 292,062.00 | 318,740.00 | 399,730.00 | 468,030.00 | 413,986.00 | 471,720.00 | 457,225.00 | 4,932,955.00 |
| இலங்கை காப்புறுதி நிறுவனம் | 1,901,811.00 | 1,791,398.00 | 1,661,644.00 | 1,753,906.00 | 1,027,538.00 | 1,133,821.00 | 1,292,018.00 | 1,457,224.00 | 1,987,692.00 | 1,557,399.00 | 1,746,091.00 | 1,699,673.00 | 19,010,215.00 |
| பீப்பிள்ஸ் இன்சுவூரன்ஸ் காப்புறுதிக் கம்பனி | 379,811.02 | 403,207.35 | 366,312.73 | 348,278.23 | 194,924.55 | 158,369.46 | 202,097.94 | 288,135.90 | 306,288.09 | 309,983.01 | 372,554.26 | 300,867.74 | 3,630,830.28 |
| கொண்டினெண்டல் இன்சூவரன்ஸ் லங்கா நிறுவனம் | 149,731.00 | 149,846.00 | 140,552.00 | 147,217.00 | 87,058.00 | 96,077.00 | 129,998.00 | 125,735.00 | 161,573.00 | 140,341.00 | 147,219.00 | 145,811.00 | 1,621,158.00 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் காப்புறுதிக் கம்பனி | 235,532.00 | 804,957.00 | 519,962.00 | 440,213.00 | 315,650.00 | 359,652.00 | 522,417.00 | 436,140.00 | 520,583.00 | 549,743.00 | 462,789.00 | 499,113.00 | 5,666,751.00 |
| தேசிய காப்புறதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் | - | - | | 187,287.30 | 61,439.69 | | 69,107.47 | 36,060.41 | 69,526.83 | 37,808.38 | 52,261.15 | 47,112.76 | 560,603.99 |
| பெயர் பர்ஸ்ட் காப்புறுதி நிறுவனம் | 1,004,186.00 | 829,389.00 | 862,715.00 | 783,909.00 | 507,332.00 | 490,292.00 | 848,733.00 | 801,080.00 | 958,742.00 | 412,602.00 | 723,292.00 | 536,213.00 | 8,758,485.00 |
| | | | | | | | | | | | | | |
| **மொத்தம்** | 6,854,385.32 | 7,480,400.37 | 6,689,638.18 | 6,540,027.29 | 4,140,424.43 | 4,207,405.47 | 5,153,602.71 | 5,639,045.62 | 7,893,804.00 | 5,770,158.61 | 6,645,283.45 | 6,162,415.02 | 73,176,590.47 |

**வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை**
**2022 திசெம்பர் 31 முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்**

**04. ஏனைய வருமானங்கள்**

| | குறிப்பு | 2022 | 2021 |
|---|---|---|---|
| | | ரூ | ரூ |
| திறைசேரி உண்டியல் வட்டி | **7** | 45,069,600.93 | 13,708,048.68 |
| நிலையான வைப்பு வட்டி | **8** | 13,320,836.98 | 8,373,693.78 |
| | | 58,390,437.91 | 22,081,742.45 |

**வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை**

**2022 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு**

**05. .செலவினங்கள்**

**5.1 நிர்வாகச் செலவினங்கள்**

| | 2022 | 2021 |
|---|---|---|
| | ரூ | ரூ |
| சம்பளங்களும் வேதனாதிகளும் | 900,000.00 | 899,700.00 |
| எரிபொருள் கொடுப்பனவு | 626,690.00 | 308,730.00 |
| போக்குவரத்துக் கொடுப்பனவு | 300,000.00 | |
| தொலைபேசி கொடுப்பனவு | 64,786.61 | - |
| ஏனைய கொடுப்பனவுகள் | 344,682.69 | 982,080.51 |
| எரிபொருள்கள் மற்றும் மசகெண்ணெய் | 604,076.00 | 403,647.57 |
| சபையின் உறுப்பினர்களது கட்டணம | 402,000.00 | 443,000.00 |
| ஆலைகள்,இயந்திர உபகரணங்கள் மற்றும் உபகரண பராமரிப்பு | 469,534.65 | 791,052.25 |
| வாகனப் பராமரிப்பு | 242,611.00 | 14,732.05 |
| எழுதுகருவிப் பொருட்களின் செலவினம் | 905,667.99 | 169,268.15 |
| மின்சாரம்,தொலைபேசி மற்றும நீர் | 251,274.46 | 151,695.04 |
| பத்திரிக்கை | 61,540.00 | 68,240.00 |
| அச்சீடு மற்றும் மொழிபெயர்ப்பு | 109,767.50 | 746,892.50 |
| மேலதிக வேலைநேர அறவிடல்கள் | 506,187.31 | 365,197.65 |
| கூட்டங்களுக்கான உபசரணை | 105,329.65 | 51,793.00 |
| கணக்காய்வு கட்டணங்கள | | |
| இந்த ஆண்டுக்கான கணக்காய்வு கட்டணம் | 221,400.00 | 200,000.00 |
| முந்தைய ஆண்டின் பற்றாக்குறை(அதிகப்படியான) ஒதுக்கீடு | | 22,600.00 |
| பயண செலவுகள் | 142,436.00 | 294,872.00 |
| தேய்மானம் | 810,629.91 | 1,229,117.82 |
| தபால் கட்டணம் | 43,870.00 | 17,715.00 |
| வங்கிக் கட்டணம் | 1,000.00 | 16,000.00 |
| பயிலுனர் கொடுப்பனவுகள் | - | 7,500.00 |
| சுத்திகரிப்பு கட்டணம் | 732,400.00 | 734,400.00 |
| நானாவித செலவினங்கள் | 98,899.99 | 144,440.00 |
| நன்கொடை | 3,803,686.15 | - |
| | **11,748,469.91** | **8,062,673.54** |

**5.2 வீதி பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினம்**

| | குறிப்புகள் | 2022 | 2021 |
|---|---|---|---|
| | | ரூ | ரூ |
| வீதி பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | | | 33,858,821.35 |
| மோதிவிட்டு தப்பியோடியதன் காரணமாக வழங்கிய இழப்பீடு | | | 6,375,000.00 |
| | | **-** | **40,233,821.35** |

**5.2.1 வீதி பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்துக்கான இழப்பீடு**

| **நிகழ்ச்சித்திட்டம்** | 2022 | 2021 |
|---|---|---|
| | ரூ | ரூ |
| வீதி பாதுகாப்பு முகாமைத்துவத்தின் திறன் மேம்பாடு | 2,088,750.00 | 107,127.00 |
| பாதுகாப்பான வீதி முறைமையொன்றினை உருவாக்குதல் | 11,788,594.00 | 7,781,651.00 |
| வீதியைப் பயன்படுத்துபவர்களின் ஒழுக்காறு கட்டியமைத்தல் | 18,732,238.20 | 25,970,043.35 |
| | **32,609,582.20** | **33,858,821.35** |

## 06. சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபரணங்களை

| | கணனிகள் | நிழற்பட பிரதி /அச்சீட்டு இயந்திரங்கள் | வீட்டு தளபாடங்கள் மற்றும் கருவிகள் | குளிரூட்டிகள | ஊடக உபகரணம் | ஏனைய சொத்துக்கள் | சாரதி கற்றல் இயந்திரம் | குளிர்சாதனப்பெட்டிக்ள | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலவு / மீள மதிப்பீடு | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| **2022.01.01 திகதியிற்கு நிலுவை** | 713,500.00 | 140,700.00 | 641,500.00 | 139,800.00 | 1,577,412.50 | 79,981.50 | 5,875,351.00 | 133,000.00 | 9,301,245.00 |
| வருடத்துக்குள் | | | | | | | | | - |
| சேர்த்தல்கள் | - | 746,600.00 | 60,972.50 | 416,759.44 | - | - | - | - | 1,224,331.94 |
| அப்புறப்படுத்தல் | - | - | - | - | - | - | 5,875,351.00 | - | 5,875,351.00 |
| **2022.12.31திகதியிற்கு நிலுவை** | **713,500.00** | **887,300.00** | **702,472.50** | **556,559.44** | **1,577,412.50** | **79,981.50** | **-** | **133,000.00** | **4,650,225.94** |
| | | | | | | | | | |
| **திரண்ட தேய்மானம்** | | | | | | | | | |
| 2022.01.01 திகதியிற்கு நிலுவை (மீண்டும் எடுத்துரைத்தல்) | 685,536.25 | 68,151.56 | 359,240.00 | 67,715.63 | 905,763.84 | 35,159.88 | 1,794,799.00 | 76,156.16 | 3,992,522.32 |
| வருடத்துக்கான அறவீடுகள் | 27,963.75 | 36,105.70 | 68,605.17 | 31,033.95 | 326,807.81 | 9,997.68 | 276,865.85 | 33,250.00 | 810,629.91 |
| அப்புறப்படுத்தல்கள் | | | | | | | 2,071,664.85 | | |
| **2022.12.31 திகதியிற்கு நிலுவை** | **713,500.00** | **104,257.26** | **427,845.17** | **98,749.58** | **1,232,571.65** | **45,157.56** | **-** | **109,406.16** | **2,731,487.38** |
| | | | | | | | | | |
| தேறிய புத்தகப் பெறுமதி | | | | | | | | | |
| 2022.12.31திகதியிற்கு நிலுவை | 27,963.75 | 72,548.44 | 282,260.00 | 72,084.37 | 671,648.66 | 44,821.62 | 4,080,552.00 | 56,843.84 | 5,308,722.68 |
| | | | | | | | **2071664.85** | | |
| **2022.12.31 திகதியிற்கு** | **-** | **783,042.74** | **274,627.33** | **457,809.86** | **344,840.85** | **34,823.94** | **-** | **23,593.84** | **1,918,738.56** |

குறிப்பு
ஊடக உபகரணங்களுக்கு பினவரும் உருப்படிகள்
உள்ளிடப்பட்டுள்ளன.

01. கெமரா மற்றும் கெமரா கருவிகள் ரூபா. 1,037,050.00

02. ப்ரொஜெக்டர் மற்றும் ஏனைய ஊடக உபகரணங்கள் ரூபா 540,362.50

**வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை**
**2021 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்கள்**

**07. திறைசேரி உண்டியல்கள்**

| விலைப்பட்டியல் இல. | 2022 திசெம்பர் 31 அமு் திகதியிற்கு முதலீடு செய்த தொகை | 2022 வருடத்துக்கான வட்டி வருமானம் | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியிற்கு கி.தே.வ.வட்டி |
|---|---|---|---|
| 1 | 14,680,981.00 | 2,121,965.31 | 287,731.71 |
| 2 | 50,978,377.00 | 7,115,422.69 | 35,712.56 |
| 3 | 8,790,480.29 | 1,270,561.93 | 172,284.12 |
| 4 | 12,935,297.48 | 1,869,647.10 | 253,518.16 |
| 5 | 22,525,221.35 | 2,795,349.20 | 343,758.30 |
| 6 | 924,083.12 | 114,677.54 | 14,102.46 |
| 7 | 35,296,057.52 | 6,055,182.12 | 1,700,513.62 |
| 8 | 14,644,926.69 | 1,868,719.23 | 1,199,549.82 |
| 9 | 11,431,542.61 | 1,652,296.78 | 224,046.15 |
| 10 | 113,917,388.86 | 14,136,991.87 | 1,738,497.79 |
| 11 | 35,263,508.44 | 6,049,607.43 | 1,698,954.75 |
| 12 | 98,212.62 | 12,188.09 | 1,498.82 |
| 13 | 57,595.54 | 6,991.64 | 878.96 |
| **மொத்தம்** | **321,543,672.52** | **45,069,600.93** | **7,671,047.22** |

**08. நிலையான வைப்புக்கள்**

| நிலையான வைப்புக்களின் இல. | கணக்கு இல. | தொகை | 2022 வருடத்துக்கான வட்டி வருமானம் | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியிற்கு கி.தே.வ.வட்டி |
|---|---|---|---|---|
| 1 | 5052659 | 10,000,000.00 | 1,084,379.75 | 123,287.67 |
| 2 | 6462242 | 3,000,000.00 | 328,593.60 | 19,726.03 |
| 3 | 6061516 | 1,000,000.00 | 106,394.59 | 9,452.05 |
| 4 | 83251129 | 40,181,614.45 | 3,347,805.10 | 1,428,924.26 |
| 5 | 83250939 | 54,384,447.69 | 3,725,075.15 | 1,573,424.02 |
| 6 | 204-60-01-00023436-6 | 50,601,024.65 | 2,730,870.95 | 2,394,190.95 |
| 7 | 204-60-01-00026713-3 | 27,382,914.41 | 2,685,197.00 | 2,494,470.97 |
| | | **186,550,001.20** | **14,008,315.78** | **8,043,475.95** |

**வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை**
**2021 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களின்**

| **09 வங்கியிலுள்ள காசு** | **2022** | **2021** |
|---|---|---|
| | **ரூ** | **ரூ** |
| வங்கி நிலுவை | 47,858,688.01 | 31,111,579.92 |
| கண்டறியப்படாத கிடைப்பனவுகள் | - | - |
| வங்கியிலுள்ள காசு | 47,858,688.01 | 31,111,579.92 |

# கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கை
# 2022

தலைவர்
வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை

**வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை.**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

(அ) மீளாய்விற்கான ஆண்டில் சபையிடம் கிடைக்கப்பெற்றிருந்த வீதி சமிக்ஞை பலகைகளின் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய ரூபா.6,586,736 இற்கு ஏற்புடையதாக, கணக்குகளில் ஒதுக்கீடுகளை மேற்கொள்ளாமை காரணமாக ஆண்டின் செலவினங்கள் மற்றும் பொறுப்புகள் குறித்த பெறுமதியில் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்விற்கான ஆண்டில் இறுதி திகதியில் நிலையான வைப்புகளின் பெறுமதி ரூபா.186, 550,001 ஆயினும், நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா.185,167,087 என்ற வகையில் காண்பிக்கப்படுதல் காரணமாக ஆண்டின் நிலையான வைப்புகளின் பெறுமதி ரூபா.1,382,914 ஆல் குறைவாக காண்பிக்கப்படுதல்.

(இ) மீளாய்விற்கான ஆண்டில் நிலையான வைப்புகளில் வட்டி வருமானம் ரூபா.14,008,316 ஆயினும், அது ரூபா.13,320,837 என்ற வகையில் காண்பிக்கப்படுதல் காரணமாக ஆண்டின் நிலையான வைப்புகளின் வட்டி வருமானம் ரூபா. 687,479 ஆல் குறைவாக காண்பிக்கப்படுதல்.

(ஈ) மீளாய்விற்கான ஆண்டின் இறுதி திகதியில் கிடைக்கப்பெற வேண்டிய நிலையான வைப்புகளின் வட்டி வருமானம் ரூபா.7,348,671 ஆயினும், அது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா. 8,043,476 என்ற வகையில் காண்பிக்கப்பட்டுள்ளதால், கிடைக்கப்பெற வேண்டிய நிலையான வைப்புகளின் வட்டி வருமானம் ரூபா.694,805 ஆக அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய் மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3 சபையின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் என்னிடம் வழங்குவதற்கு எதிர் பார்க்கின்ற, சபையின் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறல் வேண்டும

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்வின் பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமானவிடத்து, வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்கையில் ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கமைவாக பொருண்மையாக பொருந்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்ளுதலாகும்.

சபையின் 2022 ஆவது வருடாந்த அறிக்கை வாசிக்கும் போது, அதில் தகவல்கள் பொருண்மையாக தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதென நான் முடிவு செய்தால், செவ்வைப்படுத்துவதற்காக நிருவகிக்கும் தரப்புகளிடம் அவ்விடயங்களை அறிக்கையிடல் வேண்டும். மேலும் செவ்வைப்படுத்தாமல் தவறாக காண்பிக்கப்பட்டிருப்பின், அவை அரசியலமைப்பின் 154(6) ஆவது பிரிவு பிராகரம் என்னால் காலக் கிரமத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

-------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சக்தி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்-கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபையின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்பு கொள்கின்றேன்.

**2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை**

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவனம் பேணிச் சென்றிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி சபையின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.2** கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி தேசிய சபை கட்டுப்பாட்டுச் சபையின் உள்ள எவரேனுமொரு உறுப்பினர் சபையுடன் தொடர்புகொண்டு ஏதேனும் உடன்படிக்ஜ தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு அப்பாற்பட்டுள்ளது என்பது தொடர்பாக,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாது செயற்படுதல் தொடர்பாக,

| | சட்டவிதிகள்/ ஏற்பாடுகள் என்பவற்றின் தொடர்<br>------------------------ | | விபரம்<br>---------- |
|---|---|---|---|
| (அ) | 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தில் 8(1) பிரிவு மற்றும் PED 12 அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையில் 5.2.4 பிரிவு | | நிதி அண்டு ஆரம்பமாவதற்கு 03 ஆண்டுகளுக்கு முன்னர் முதலாவது வரவு செலவு பதிவேடு அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமாயினும், சபையால் வரவு செலவு பதிவேடு 2022 மார்ச் 30 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆம் இலக்க PED/12 அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | | |
| | (1) | 4.2.6 பிரிவு | காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்திர என்ற வகையில் சபையின் செயலாற்றுகை அறிக்கைகள் மீளாய்வு செய்தல் வேண்டுமாயினும், சபையால் மீளாய்விற்கான ஆண்டில் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் எதுவும் நடாத்தப்படவில்லை. |
| | (11) | 5.1.3 பிரிவு | நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னராக செயற்றிட்டம் அங்கீகரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டுமாயினும், 2022 செயற்பாட்டு திட்டம் பொருட்டு 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | | 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் திகதிய தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் NP/5P/5dg/17 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிறுவனத்தால் நிலையான அபிவிருத்தி இலக்குகள் 03 ஐ வீதி பாதுகாப்புக்கு ஏற்புடையதாக அடையாளம் காணப்பட்டிருப்பினும், கணக்காய்வு திகதியிலும், சுற்றறிக்கை பிரகாரம் நிறுவனத்திற்கு ஏற்புடையதான நிலையான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படவில்லை. |
| (ஈ) | | 2019 சனவரி 12 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் DMA/1 – 2019 ஆம் இலக்க சுற்றறிக்கை<br>5.3 பந்தி | சுற்றறிக்கை பிரகாரம் ஆண்டுக்கு ஆகக் குறைந்ததாக 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்தப்படல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் 01 கூட்ட அமர்வினை மட்டும் நடாத்தல். |

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் செயல்படுதல் தொடர்பாக,

(அ) வீதி அபிவிருத்தி தொடர்பான தேசிய சபை, ஆணைக்குழுவாக தாபிக்கும் பிரதான நோக்கத்தினைக் கொண்டு தேசிய சபை தாபித்து 17 ஆண்டுகள் முடிவடைந்திருப்பினும், 2023 ஏப்ரல் 26 ஆம் திகதி வரை அதனை ஆணைக்குழுவாக தாபிக்கப்படவில்லை. அதன் காரணமாக சபையின் பணிகள் நிறைவேற்றுவதற்கு சட்டத்துடனான அதிகாரம் கிடைக்கப்பெறவில்லை என்பதுடன், முறையான பதவியணியும் நியமிப்பதற்கு இயலாதிருந்தது.

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தேசிய சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும், ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை என்பது தொடர்பாக,

## 2.5 ஏனைய விடயங்கள்

(அ) அரசாங்க கணக்கு செயற்குழுவால் வழங்கியுள்ள கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் யூலை மாதம் திருத்தம் செய்யப்பட்ட வரவு செலவு பதிவேடு மற்றும் செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டு, அதிக வேகம் காரணமாக நிகழ்கின்ற வீதி விபத்துகளை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தியிருந்ததுடன், 2022 ஆம் அண்டில் உரிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ரூபா.மில்லியன் 150 ஆன ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு செய்திருப்பினும், தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய பெறுகை நடவடிக்கைகளை முடிவுறுத்தாமை காரணமாக மொத்த ஒதுக்கீடும் எஞ்சியிருந்தது. அதேபோன்று கடந்த ஆண்டிலும் மேற்படி கட்டளை படி இந்தப் பணி நிறைவேற்றப்படவில்லை.

(ஆ) 2014 பெப்ருவரி 17 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2014(4)(ஈ) பிரிவு பிரகாரம் மீளாய்விற்கான ஆண்டில் வருடாந்த செயற்றிட்டத்துடன் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டத்தில் உரிய பொருட்கள், சேவைகள் மற்றும் பல்வேறு கருத்திட்டங்கள் நிறைவேற்றுதல் தொடர்பாக ரூபா.மில்லியன் 335.14 ஐ ஒதுக்கீடு செய்திருப்பினும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் அந்த திட்டத்தில் ரூபா.மில்லியன் 186.8 இற்கு ஏற்புடையதாக 09 பெறுகை திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(இ) உலக சுகாதார அமைப்பினால் 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் சபையிடம் ரூபா.மில்லியன் 1.7 ஐ வழங்கியிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டு இறுதி வரை அந்த நிதி தொகை பயன்படுத்தப்பட்டு எந்தவொரு கருத்திட்டமும் நிறைவேற்றப்படவில்லை.

(ஈ) சபையின் நடைமுறைக் கணக்கில் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.மில்லியன் 45 ஆன தொகை காணப்பட்டது. சபை வருமானத்தில் மாதாந்தம் செலவிடுவதற்கு ஓரளவு பணத் தொகை ஒதுக்கீடு செய்துக்கொண்டு மிகை தொகையை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதுடன், 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறுவனத்திற்குரியதாக நடைமுறை கணக்கில் ரூபா.47,858,688 ஆன மீதி காணப்பட்டது.

(உ) 2245/31 ஆம் இலக்க மற்றும் 2021 திசெம்பர் 17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் 2 ஆவது பிரிவு பிரகாரம் 2% ஆன காப்புறுதி பங்களிப்பு தொகை அறவிடல் வேண்டுமாயினும், 2 தனிப்பட்ட காப்புறுதி நிறுவனங்கள் 1% தொகை பங்களிப்பு தொகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன், ஏனைய 1% ஆன தொகைக்கு ஏற்புடையதாக ரூபா.1,262,404 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.



டப்.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

**வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை தொடர்பில் விளக்கமளித்தல்**

2.2.2 ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள்

(அ) <u>சபையால் நிதியாண்டு ஆரம்பித்து 2022 மார்ச் 30 ஆம் திகதியில் பாதீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.</u>

2022 ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டிருந்த வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் பாதீடு 2021.12.29 ஆம் திகதி சபை பத்திர இலக்கம் 2021-17/06-01 மூலம் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு தேசிய சபையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் 2022.01.04 ஆம் திகதி அமைச்சு செயலாளரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது. அதன்போது அமைச்சினால் அறிவிக்கப்பட்ட திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் 2022.04.25 ஆம் திகதி அமைச்சு செயலாளரின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட வரவு செலவு பாதீடு பொருட்டு 2022.10.27 ஆம் திகதி தேசிய சபையின் அனுமதி பெற்றுக்கொண்டதன் பின்னர், சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை மேலும் அறியத் தருகின்றேன்.

**(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை**

**(1) 4.2.6 பிரிவு**

2022 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக அனைத்து காலாண்டுகளும் பொருட்டு வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் பதவியணி பங்குபற்றச் செய்வித்து, தலைவர் அவர்களின் தலைமைத்துவத்தில் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் 2022.04.04, 2022.08.10 மற்றும் 2022.09.15 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டதுடன், அதுவரை உள்ளக முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் நடாத்தும்போது கூட்ட அறிக்கைகள் பராமரிக்கப்படவில்லை என்பதுடன், அரசாங்கத்தின் கணக்காய்வு பிரிவால் 2022.09.15 ஆம் திகதி மேற்கொண்ட தெளிவுபடுத்தல்களின் பிரகாரம், 2022.09.15 ஆம் திகதி தொடக்கம் முன்னேற்ற மீளாய்வு கூட்ட அறிக்கைகள் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அமைச்சினால் நடாத்தப்படுகின்ற வருடாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டம் 2022.12.08 ஆம் திகதி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சில் மருதானை வளாகத்தில் நடாத்தப்பட்டது.

மேலும் எதிர்காலத்தில் காலாண்டு ரீதியாக உள்ளக முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துவதற்கும் கூட்ட அறிக்கைகளை பராமரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத் தருகின்றேன்.

**(11) <u>5.1.3. பிரிவு</u>**

2022 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் செயற்றிட்டம் 2021.12.29 ஆம் திகதி சபை பத்திரிக்கை இலக்கம் 2021-17/06-01 மூலம் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்காக தேசிய சபையின் அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர் 2022.01.04 ஆம் திகதி அமைச்சு செயலாளரின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதன்போது அமைச்சினால் அறிவிக்கப்பட்ட திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் 2022.04.19 ஆம் திகதி மீண்டும் அமைச்சு செயலாளரின் அனுமதிக்கு சமர்ப்பித்த பின்னர் MT/05/03/01-2022 மூலம் 2022.04.25 ஆம் திகதி செயற்றிட்டம் பொருட்டு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

எதிர்வருங் காலத்தில் தங்களால் குறிப்பிடப்பட்ட 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மேலும் அறியத் தருகின்றேன்.

**(இ) <u>நிலையான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படாமை</u>**

வீதி அபிவிருத்தி தொடர்பான தேசிய சபையானது, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைந்த நிறுவனமாக செயற்படும் நிறுவனமாவதால் நிறுவனத்திற்கு ஏற்புடையதாக குறிப்படத்தக்க நிலையான அபிவிருத்தி திட்டம் இதுவரை தயாரிக்கப்படவில்லை. எனினும், போக்குவரத்து மற்றம் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் தயாரிக்கப்படும் நிலையான அபிவிருத்தி திட்டம் பொருட்டு, வீதி பாதுகாப்பு தொடர்பாக உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றி அமைச்சிற்கு தேவையான ஒத்துழைப்பு வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

<u>(ஈ) கணக்கயர்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்</u>

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் செயலாளராக பணியாற்றிய திரு.ஏ.எம்.ஆர்.கே.ஜயசிங்க அவர்களை கட்டாய ஓய்வு பெறச் செய்வித்தலின் பின்னர் 2022.04.25 ஆம் திகதி வரை செயலாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன், அப் பதவியின் பொருட்டு அப்போதைய போக்குவரத்து அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் சபை உறுப்பினராக பணியாற்றிய ஆர்.ஏ.கே.ரேணுகா, சிரேட்ட உதவிச் செயலாளர் (புகையிரத நிருவாகம்) நியமனம் செய்யப்பட்டார்

அதன்படி வெற்றிடமாகிய சபை உறுப்பினர் பதவிக்காக நியமனம் செய்யப்பட்ட சிரேட்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) திருமதி கே.ஜீ.எஸ்.தினேஷா அவர்கள் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினராக 2022.08.23 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் 2022.09.07 ஆம் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட்டது.

எதிர்வருங் காலங்களில் இத்தகைய பிரச்சினைகளை தவிர்த்துக்கொண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்தப்படும் என்பதை மேலும் குறிப்பிடுகின்றேன்.

**2.2.3 (அ) முறையான வகையில் பதவியணி அங்கீகரித்துக்கொள்ளாமை மற்றும் ஆணைக்குழு தாபிக்கப்படாமை**

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை, தேசிய போக்குவரத்து பாதுகாப்பு தொடர்பான ஆணைக்குழுவாக தாபிப்பதற்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்ட சட்ட வரையுள் சட்ட வரைஞரிடம் அனுப்பி வைக்கப்பட்டது. சட்ட வரைஞரால் திருத்தங்களுடன் 2023.03.29 மற்றும் 2022.05.18 ஆம் திகதிகளில் மீண்டும் போக்குவரத்து அமைச்சிடம் அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் சட்ட வரைஞரிடம் அனுப்பி வைக்கப்பட்டது. 2022.12.16 ஆம் திகதி இராஜாங்க அமைச்சரால் வழங்கிய ஆலோசனைகள் பிரகாரம் சட்ட வரையுளை மீண்டும் திருத்தம் செய்யப்பட்டு 2022.12.16 ஆம் திகதி மேலதிக செயலாளரால் (அபிவிருத்தி 11) அமைச்சு செயலாளரின் அனுமதியுடன் சட்ட அலுவலரிடம் அனுப்பி வைக்கப்பட்டதுடன், அதற்கான சட்டமா அதிபரின் பிரேரணைகள் தற்போது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிடம் கிடைக்கப்பெற்றுள்ளன. அதன்படி தேவையான எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2.2.4 திட்டமிடல் மற்றும் வரவு செலவு கட்டுப்பாடு**

கடந்த காலப்பகுதியில் நாட்டில் நிலவிய சிக்கலான பொருளாதார மற்றும் சமூக நிலைமை காரணமாக நடைமுறைப்படுத்த முடியாதுபோன செயற்றிட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் 2023 ஆண்டுக்காக முன்மொழியப்பட்ட செயற்பாடுகளை பயனுள்ள வகையில் 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

## 2.5 ஏனைய விடயங்கள்

### (அ) பொது கணக்கு செயற்குழுவின் கட்டளைகளை நடைமுறைப்படுத்தல்

இலங்கை பொலிஸிடம் ரூபா.மில்லியன் 150 ஆன தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கும் கருத்திட்டம் பொருட்டு, அங்கீகரிக்கப்பட்ட விலைமனு கோரும் ஆவணங்கள் தயாரித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2023.01.10 ஆம் திகதி நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் போக்குவரத்து இராஜாங்க கௌரவ அமைச்சர் கௌரவ லசந்த அலகியவன்ன அவர்களால், இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு முன்னர் அதன் விளைவுதிறன் தொடர்பாக மீள ஆய்வு செய்த பின்னர் உரிய பொருட்களை கொள்வனவு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

### (ஆ) ரூபா.மில்லியன் 186.8 இற்கு ஏற்புடையதான பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளாமை

Implementation of programs to reduce Road accidents due to speeding என்ற வகையில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா.மில்லியன் 150 ஆன மதிப்பிடப்பட்ட தொகை ஒதுக்கீடு செய்துள்ள, பொது கணக்கீட்டு செயற்குழுவின் கட்டளையாக நடைமுறைப்படுத்தும், இலங்கை பொலிஸிடம் தேவைப்படும் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல் தொடர்பிலான பெறுகை நடவடிக்கைகள் போக்குவரத்து மற்றம் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகிறது.

Preparation of a documentary video on road safety (Rs.1.7m) மற்றும் renovation of the Chairmen's office (Rs. 1m) ஆகிய கருத்திட்டங்கள், 2022.08.18 ஆம் திகதி மேற்கொண்ட திருத்தம் செய்யப்பட்ட பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட புதிய கருத்திட்டங்களாவதுடன், திருத்தம் செய்யப்பட்ட பெறுகை திட்டம், செயற்றிட்டம் மற்றும் வரவு செலவு பாதீடுக்காக தேசிய சபையின் அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர் அமைச்சு செயலாளரது அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 2022.11.02 ஆம் திகதி அமைச்சு செயலாளரது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் 2022 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் குறித்த கருத்திட்டங்களை முடிவுறுத்துவதற்கு இயலவில்லை.

Purchase of media equipment (Rs2.M) மற்றும் Projector machine (Rs.04 M) Buying Vehicle (Rs.25.5 M) ஆகிய கருத்திட்டங்கள் 2022.08.18 ஆம் திகதி பெறுகை திட்டம் திருத்தம் செய்கையில் அகற்றப்பட்டன.

Steel wardrobes (Rs.1.M), Hand microphone compensator set and sound syst. (Rs 1 M) மற்றும் Purchase of LED panel and generator (Rs.4.5 M) ஆகிய கருத்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டில் நிலவிய இறக்குமதி வரையறைகள் காரணமாக பெறுகை பணிகள் மேற்கொள்ளவில்லை.

இலங்கை பொலிஸ் மூலம் உலக சுகாதார அமைப்பின் உதவியுடன் மத்திய மற்றும் மேல் மாகாணத்தில் தற்போது நடைமுறைப்படுகின்ற, வீதி வாகன விபத்துகளின் தரவுகளை முகாமைத்துவ முறைமையை நாடளாவிய வகையில் தாபிப்பதற்கு இலங்கை பொலிஸிற்கு தேவையான தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட விலைமனு கோரும் ஆவணங்கள் மற்றும் பத்திரிக்கை அறிவிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது நிலவும் இறக்குமதி ஏற்றுமதி ஒழுங்குவிதிகள் காரணமாக பொருட்களை கொண்டு வருவதற்கு ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளரது அனுமதி பெற்றுக்கொள்ளுதல் பொருத்தமானதென அமைச்சு செயலாளரால் ஆலோசனை வழங்கப்பட்டது. அதன் படி பொருட்களை கொண்டு வருவதற்காக ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளரது அனுமதி பெற்றுக்கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2023.01.10 ஆம் திகதி நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் போக்குவரத்து கௌரவ இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன அவர்கள், இந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக இதன் பயன்பாடு தொடர்பாக மீண்டும் ஆய்வு செய்த பின்னர் உரிய பொருட்களை கொள்வனவு செய்யுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

(இ) உலக சுகாதார அமைப்பினால் 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ரூபா.மில்.1.7 ஆன பணத்தொகை பயன்படுத்தப்படாமை

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை மூலம் நடைமுறைப்படுத்துகின்ற கருத்திட்டங்களுக்கு தேசிய சபை நிதியத்தில் உள்ள பணம் பயன்படுத்தப்படுகிறது. உலக சுகாதார அமைப்பு மூலம் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையிடம் அனுப்பி வைக்கப்பட்ட பணத் தொகை குறித்துரைத்த ஒரு பணிக்கு பயண்படுத்தாமை காரணமாக, அந்த பணத் தொகை தேசிய சபை நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

மேலும், உரிய பணத்தொகை வழங்குவதற்கான அடிப்படை தொடர்பில் தேவையான ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏதேனும் விசேட கருத்திட்டம் பொருட்டு வழங்கியிருப்பின், குறித்த கருத்திட்டம் எதிர்வருங் காலங்களில் நடைமுறைப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**(ஈ) நடைமுறை கணக்கில் 2022.12.31 ஆம் திகதியில் ரூபா.மில்லியன் 45 ஆன தொகை நிலவுதல்**

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையில் நடைமுறை கணக்கில் 2023.03.31 ஆம் திகதியில் மிகை தொகையான ரூபா.மில்லியன் 40 ஐ, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் நடைமுறை கணக்கில் உள்ள இலங்கை வங்கியில், ஹயிட்பார்க் கிளையில் மூன்று மாதங்களுக்கொருமுறை இற்றைப்படுத்தும் வகையில் நிலையான வைப்பில் முதலீடு செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) காப்புறுதி பங்களிப்புத் தொகை 2% வரை அதிகரித்த பின்னர், நிலவிய 1% ஆன பங்களிப்பு தொகை வழங்குவதற்காக நடவடிக்கை மேற்கொண்ட நிறுவனங்கள் தொடர்பில் மேற்கொண்டுள்ள நடைமுறைகள்

இது தொடர்பாக உரிய காப்புறுதி நிறுவனங்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன் குறித்த நிறுவனங்களிடமிருந்து உரிய பணத் தொகை, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையிடம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

மலித் ஜயதிலக்க

தலைவர்

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை